ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும்
ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை

ஆசிரியர்: பி. வீரராகவன்

வருட சந்தா ரூ. 3 — தனிப்பிரதி அணு 4

மலர் 11 — 1950, ஜூலை — இதழ் 7

மாதவனார் மனமாற்றம்

“முதலாவது பொதுஜன அபிப்பிராயத்தைக் கேட்க வேண்டும். இரண்டாவது நிபுணர்கள் கருத்தைக் கேட்க வேண்டும். மூன்றாவது தேசபக்தியில் மற்ற யாருக்கும் குறைந்தவர்களாகயில்லாத நிரந்தர அதிகாரிகளின் கருத்தைக் கேட்க வேண்டும். இந்த மூன்று விஷயங்களில் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியர்கள் நாட்டம் காட்டாவிட்டால் நமது ஜனநாயகம் ஒரு அற்பமான பொருளாகிவிடும்” என்று எடுத்துக்காட்டுகிறார் நமது கல்வி மந்திரி மாதவனார், அண்மையில் சிந்தாதரிப் பேட்டையில் நடந்த ஓர் ஆசிரியர் கூட்டத்தில்.

இந்த மூன்று கருத்துக்களும் அரசியலில் ஈடுபட்ட தலைவர்களும், ஆட்சியாளர்களும் அறிய வேண்டிய அரசியல்

அரிச்சுவடி. இந்த அரசியல் அரிச்சுவடியை மறந்து, அதிகாரம் கைவசம் கிடைத்த காரணத்தால், நமது ஆட்சியாளர்கள் இது வரை "கண்டதே காட்சி, கொண்டதே கோலம்" என்ற பழமொழிப்படி, பொதுமக்கள், அறிஞர்கள், ஆசிரியர்கள் நாட்டின் நலங் கருதும் நல்லோர்கள், ஹிந்தியை கட்டாயப்பாடமாக்க வேண்டியதில்லை என்று கூட்டங்களிலும், ஏடுகளிலும் எடுத்துக் காட்டியும், அவர்கள் கருத்தை அறவே புறக்கணித்து ஹிந்தியை கட்டாயப் பாடமாக்கி, உயர்நிலைக்கல்வியை ஒரு குழப்பமான நிலையில் கொண்டு வந்து விட்டு விட்டார்கள். நாங்கள் தியாகிகள், காந்தியாரின் சீடர்கள், வெள்ளையனை வெளியோட்டக் கிளர்ச்சி செய்தவர்கள், சுயராஜ்யத்தை வாங்கித் தந்தவர்கள், நாங்கள் எல்லாம் அறிந்தவர்கள் "இவர்கள் யார் எங்களுக்கு புத்தி சொல்வதற்கு" என்று பொதுமக்கள் அபிப்பிராயத்தைப் புறக்கணித்தார்கள். நிபுணர்களின் அபிப்பிராயத்தை நிராகரித்தார்கள். ஆசிரியர்களின் அபிப்பிராயத்தை அலட்சியம் செய்தார்கள்.

ஆனால் இன்று மாதவனார் பேசுகிறார்— "உபாத்தியாயருடன் அடிக்கடி தொடர்பு கொள்வது" என் கடமைகளில் ஒன்று என்று.

"நான் கல்வி மந்திரி; ஆனால் நான் கல்வித் துறையில் நிபுணன் அல்ல" என்று பேசியிருக்கிறார். இத்தகைய எதிர்பாராத அவர் வீசும் வாசகங்களையும் எடுத்துக் காட்டும் ஜனநாயக அடிப்படை தத்துவங்களையும் கண்டு ஆரம்பாசிரியர்களாகிய நாம் ஆனந்தமும் ஆச்சரியமும் அடையாமலிருக்க முடியவில்லை. இதுவரை தோன்றாத அரசியல் அரிச்சுவடி மந்திரியாருக்கு திடீரென தோன்றி அவர் மனம் மாற்ற மடைந்ததற்கு தக்க காரணம் நமக்கு விளங்கவில்லை. உண்மையாகவே அவரது உள்ளம் மாறியிருக்கிறதா? அல்லது அந்த மாற்றம் தற்காலிகமானதா? அல்லது சிலர் கூறுவது போல் அண்மையில் தேர்தல் வருவதால், மக்கள் மனதை திருப்தி செய்து மறுபடியும் தேர்தலில் வெற்றியடைய செய்யும் தந்திரச் செயலா என்பது நமக்குப் புரியவில்லை.

எது எப்படியிருந்தாலும் இன்று அவர் மனமாற்றத்தைக் கண்டு நாம் மகிழ்ச்சி பெறுவ தோடல்லாமல், கட்டாய ஹிந்தியை பள்ளிக் கூடங்களில் புகுத்தி, பள்ளிமாணவர்களின் உள்ளங்களைப் பாழ்படுத்தாமல் ஆங்கிலமும், தமிழும் மட்டும் படித்தால் போதும், வேண்டுமானால் ஹிந்தி கற்றுக் கொள்ளலாம்,

அதுவும் இஷ்டமில்லையேல் வேறு ஏதாவது கைத்தொழில் கற்றுக் கொள்ளலாம் என்று உத்திரவிட்டதைப்பற்றி நாம் மனமார அத்தகைய மாற்றத்தை வரவேற்கின்றோம்! அவரையும் வாழ்த்துகின்றோம்!!

அவினாசிலிங்கம் செட்டியாரைப் போல் பிடிவாதத்துடன் வாதாடாமல், பொதுமக்களின் அபிப்பிராயத்திற்கு வளைந்து கொடுக்கும் பண்பினைக் கொண்ட மாதவனாரை மறுபடியும் மனமாரப் பாராட்டுகின்றோம். இந்த மனமாற்றம் தற்காலிகமாகயில்லாமல் நிரந்தரமாகயிருக்க வேண்டுமென்பதே நமது அவா —நாட்டின் நலங்கருதி. சமீபத்தில் அரசாங்க அலுவலகத்தின் (Secretariate Association) குமஸ்தாக்கள் கூட்டத்தில், மந்திரியார் குமஸ்தாக்களுக்கு அதிகமாக சம்பளமும், பஞ்சப்படியும் கொடுக்க வேண்டுமென்று கேட்ட கோரிக்கைக்கு பதிலளிக்கையில், அரசாங்க குமாஸ்தாக்கள், ஆங்கிலேயர் ஆட்சியில் திறமையாக வேலை செய்தது போல் தற்போது செய்வதில்லை என்றும், அரசாங்கத்தில் பணமில்லாமலிருக்கையில் மற்ற குமாஸ்தாக்களைக் காட்டிலும் இவர்களுக்கு அதிகமாக சம்பளமும், பஞ்சப்படியும் கொடுக்க இயலாதென்றும், அதே சமயத்தில் ஒரு சாதாரண தொழிலாளிக்குக் கிடைக்கும் ஊதியம் அளவுகூட, நாட்டில் ஆரம்ப ஆசிரியர்களுக்குக் கிடைக்காமலிருப்பதற்கு தான் வருந்துவதாகவும், அவர்களுக்குக் குறைந்தது மாதம் 5 ரூபாயாவது சம்பளத்தில் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்றும், அதற்காக ரூபாய் 75 இலக்ஷம் உடனடியாக பணம் கண்டு பிடிக்கப்பட வேண்டுமென்றும், ஆரம்பாசிரியர்கள் பால் அநுதாபமாகப் பேசியிருக்கின்றார். இப்படி மந்திரியார் மனம் ஆசிரியர் பால் அன்பும், பிள்ளைகள் பால் பிரியமும் கொண்டு மன மாற்றமடைந்ததைக் காண மகிழ்ச்சி கொள்ளுகின்றோம். மனம் மாறுபட்டால் மட்டும் பிரயோஜன மில்லை. [illegible]தில் தோன்றிய எண்ணங்களை செயலில் கொண்டு வர அவர் மனம் சற்று உரம்பட்டு செயலில் இறங்க வேண்டும். ஆசிரியரின் சம்பள உயர்வுக்காக ரூ 75 லக்ஷம் கண்டு பிடிப்பது பிரமாதமானதல்ல—உண்மையான அன்பு மந்திரியாருக்கு ஆசிரியர் பால் இருக்குமானால். ஏற்கனவே பத்திரிகைகளில் ஆசிரியர் சமபளத்தை உயர்த்தப் போவதாக செய்திகள் வெளி வந்திருக்கின்றன. ஆனால் இது வரையில் நிரந்தரமான உத்தரவுகள் வந்தபாடில்லை. ஆதலின் உடனடியாக ஆசியர்களுக்கு ரூ 5, 1950 ஜனவரி மாத முதல் உயர்த்திக் கொடுக்கும்படியான ஓர் அறிக்கை வெளியிடும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஆசிரியர்களுள் பிரிவினை ஏன் ?

மக்களைப் பிரித்தாளும் பித்தலாட்டமுறை வெள்ளையன் ஆட்சியில் தான் நாம் கண்டறிந்தோம். அதற்காக வெள்ளையனை வெளியேற்றி விட்டோம். ஆனால் அதே பித்தலாட்டமுறை சுயராஜ்யம் பெற்ற பிறகும், சுதந்திர நாட்டில் சூழ்ச்சியாக நடந்து வருவதைக் காண மிகமிக வருந்துகிறோம். ஆசிரியர்களில் சிலர் எல். டி., படித்திருக்கலாம, பலர் செகண்டரி கிரேட், ஹையர் கிரேட், லோயர் கிரேட் படித்திருக்கலாம். ஆனால் எல்லோரும் பாடசாலை ஆசிரியர்களே. வசதிக் கேற்ப, சூழ்நிலைக் கேற்ப பலர் ஆரம்பப் பாடசாலைகளிலும், சிலர் செகண்டரி பாடசாலைகளிலும், உயர்நிலைப் பாடசாலைகளிலும் எல்லா கிரேட் ஆசிரியர்களும் கலந்து அமர்ந்திருக்கிறார்கள். அவரவர்கள் படிப்புத் திறனுக்குத் தக்கபடி சம்பள வித்தியாசமிருப்பது நியாயமும் ஒழுங்குமாகும்.

சமீபத்தில் டில்லியில் வகுத்துள்ள இந்திய அரசியல் திட்டப்படி சென்னை மேல் சபைக்கு ஆறு ஸ்தானங்கள் ஒதுக்கப் பட்டிருக்கின்றன. அந்த ஸ்தானஙகளுக்கு உயர்தர, செகண்டரி பாடசாலைகளிலுள்ள சுமார் 20,000 எல்லா கிரேட் ஆசிரியர்களையும் ஓட்டர்களாகப் பதிவுசெய்து கொள்ளப்படுகிறது. அப்படி பதிவு செய்து கொண்டுள்ளவர்களில் ஆறு ஆசிரியர்களை தேர்தெடுக்கவும் அனுமதி கொடுக்கப்படுகிறது. ஆனால் ஆரம்பப் பாடசாலைகளிலுள்ள 1,50,000 பல கிரேட் ஆசிரியர்களுக்கு அந்த உரிமையை கொடுக்காமல் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களுக்கு ஸ்தானம் என்றால் நாட்டிலுள்ள எல்லா ஆசிரியர்களையும் ஓட்டர்களாகச் சேர்த்து தேர்தல் நடத்த வேண்டுமே ஒழிய நாட்டிலுள்ள 80 சதவிகிதமுள்ள 1,50,000 ஆசிரியர்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு சுமார் 20,000 உயர்தர செகண்டரி பாடசாலை ஆசிரியர்களை மட்டும் வைத்துக் கொண்டு தேர்தல் நடத்துவது ஒழுங்கும் நியாயமுமற்றது ஆகும்—இந்த ஜனநாயக ஆட்சியில், தற்போது நம் நாட்டில் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் என்றும், உயர்தரப் பாடசாலை ஆசிரியர்கள் என்றும், கல்லூரி ஆசிரியர்கள் என்றும் பலவாறாகப் பிரிக்கப்பட்டிருப்பதினால்தான் இந்த நாட்டில் ஆசிரியர் சமூகம் முன்னேறவில்லை. ஆசிரியர் சமூகம் முன்னேற்றமடையாத காரணத்தால் நாட்டில் கல்வியின் திறனும் உயரவில்லை, படிப்பும் வளரவில்லை. ஆசிரியர் சமூகமும் நாளுக்குநாள் சீர் கெட்டு சீர் அழிந்து வருகின்றது. நாட்டில் கல்வித் திட்டமும், நிலையும் குழப்பத்தில் குழம்பிக்கிடக்கிறது. இதை ஆட்சியாளர்கள் நன்குணர வேண்டும். ஆட்சியாளரைக் காட்டிலும்

நாட்டின் நலனுக்காக உழைக்கும் எல்லா கிரேட் ஆசிரியர்களும் சற்று சிந்தித்து ஒன்றுபட வழிவகைகள் செய்ய வேண்டும். உதாரணமாக நம் நாட்டிலுள்ள கல்லூரி ஆசிரியர்கள், உயர்தர செகண்டரி பாடசாலை ஆசிரியர்கள் ஜில்லாபோர்டு முனிசிபல், எயிடட் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள், ஓர் குறிப்பிட்ட நாளில் எல்லா கிரேட் ஆசிரியர்களும் ஒன்றாகக் கூடி, ஓர் மகா நாட்டைக் கூட்டி அதில் இந்தஇந்த கிரேட்ஆசிரியர்களுக்குஇவ் வளவு சம்பளம் அவசியம் கொடுக்கப்பட வேண்டுமென்றும் குறிப்பிட்ட சலுகைகள் காட்டப்பட வேண்டுமென்றும் அரசாங் கத்திற்கு ஒருமுகமாக எடுத்துக் காட்டுவார்களேயானால், இந்த அரசாங்க மட்டுமல்ல, எந்த அரசாங்கமாயிருந்தாலும் இம் மாபெரும் மாநாட்டின் தீர்மானங்களுக்கு செவி சாய்ப்பது மட்டுமல்ல, செயலாற்றவும் துணிவு கொள்வார்களே ஒழிய புறக்கணிக்க மாட்டார்கள். இத்தகைய பெரிய ஆசிரியர் ஒற் றுமை இந்நாட்டில் ஏற்பட்டாலொழிய இந்த நாட்டு ஆசிரியர் களும், நாட்டில் கல்வியும் நல்ல முறையில் முன்னேறாது. இதை ஆசிரியர்கள் நன்கு சிந்திக்கும்படி கேட்டுகொள்ளுகிறேன். இன்று நாட்டில் ஆசிரியர் சமூகம் துண்டு துண்டாக பிரிக்கப் பட்டிருக்கிறது. ஆரம்பக் கல்வித் திட்டத்தில் சீர்திருத்தம் செய்ய வேண்டுமானால் ஆரம்பாசிரியரை புறக்கணித்து விட்டு M.A.,B.A. பட்டம் பெற்ற உயர்தர சில குறிப்பிட்ட ஆசிரியர்களை மட்டும்அபிப்பிராயம் கேட்பதும், உயர்தர பாடசாலைகளை சீர்த் திருத்த வேண்டுமானால் கல்லூரி ஆசிரியர்களை அழைத்து அபிப்பிராயம் கேட்பதும் போன்ற முறைகள் கையாளப்படு கிறது. இப்படி ஆசிரியர்களைப் பிரித்துப் பிரித்து அபிப்பிராயங் களைக் கேட்பதும், ஆசிரியர்களை ஒன்று சேர்க்காமல் ஆசிரியர் சங்கங்களை பிரித்துவைப்பதும் போன்ற பல செயல்கள் இந்த ஆட்சியாளரால் கையாளப்பட்டு வருகிறது. இது மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும். இப்படி பிரித்தாளும் சூழ்ச்சி முறை அன்னியர் ஆட்சியில் இருந்தது, இருக்கவும் வேண்டி யிருந்தது, அன்னியர்கள் ஆசிரியர்களை அடிமையாகக் கொண்டு ஆளுவதற்காக, இன்று நாம் பெற்றுள்ள சுதந்திர ஆட்சியில் அத்தகைய பிரித்தாளும் சூழ்ச்சிகள் அழிக்கப்பட வேண்டும், ஒழிக்கப்பட வேண்டும். அதறகாக ஆட்சியாளரும் ஆவன செய்யவேண்டும் - நாடு நல்லமுறையில் கல்வியில் வளர்ச்சி அடைய வேண்டுமானால்.

அதன் அறிகுறியாக ஆரம்பாசிரியர் உட்பட எல்லா ஆசிரி யர்களையும் ஓட்டர்களாகப் பதிவு செய்துகொண்டு ஆசிரியர்

எய்டெட், பஞ்சாயத் ஆசிரியர்களுக்கு ஓர் வேண்டுகோள்

நமது **புதுமுறை சங்க வாசகங்கள்** ஒன்றுமுதல் ஐந்தாம் வகுப்பு வரையில் பாடபுத்தகங்களாக வைத்துக் கொண்ட எய்டட், பஞ்சாயத் பாடசாலைகளுக்கு மட்டும்தான் நமது "ஆரம்பக் கல்வி" மாதாந்திர பத்திரிகையை தொடர்ச்சியாக இனமாக இவ்வருடம் அனுப்பப்படும். வாசகங்களை வைத்துக் கொள்ளாமல், ஆட்சிமுறை, தோட்டவேலை போன்ற சில உப பாடபுத்தகங்களை வைத்துக் கொள்ளும் பாடசாலைகளுக்கு பத்திரிகை அனுப்பப்பட மாட்டாது.

சென்னை அலுவலகத்திற்கு ஆர்டர்கள் அனுப்பி புத்தகங்களை வாங்கிய பாடசாலைகளை, இந்த வருடத்திற்கு பத்திரிகை அனுப்ப புதிதாக ரிஜிஸ்டர் செய்துள்ளோம். ஆனால் இன்னும் சிலர் ஆங்காங்குள்ள புத்தகக் கம்பெனிகளில் நமது புதுமுறை சங்கவாசகங்களை வாங்கின (Bills) ரசீதுகளை அனுப்பாமலிருக்கின்றனர். அவர்களை சீக்கிரம் அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

சென்ற வருடம் நமது வாசகங்களை வைத்தவர்கள் இவ்வருடமும் தொடர்ந்து வைத்திருப்பதாக கடிதம் மட்டும் எழுதுகிறார்களே தவிர, எங்கு, எப்பொழுது வாங்கினார்கள் என்ற விளக்கம் எழுதுவதில்லை. சென்னை அலுவலகத்தில் வாங்கியிருந்தால் ஆர்டர் அனுப்பிய தேதி, அல்லது புத்தகக் கடைகளில் வாங்கியிருந்தால், கடைக்காரர் ரசீது அவசியம் அனுப்பவேண்டும். இல்லையேல் இவ்வருடம் நமது பத்திரிகையை இனமாக அவர்களுக்கு அனுப்ப முடியாதென்பதை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஆசிரியர்,

ஆரம்பக் கல்வி.

களுக்குள் பிரிவினையில்லாமல் மேல் சபையில ஆறு ஸ்தானங்களையும் எல்லா கிரேட் ஆசிரியர்களும் போட்டியிடும்படி தேர்தல் நடத்தவேண்டும். இதுதான் ஜனநாயக முறை. ஆட்சியாளர்கள் ஆவன செய்வார்களாக.

ஆசிரியர் தொழிலிலும் வகுப்புவாதமா?

N. வெங்கடாசலம்.
(தலைவர், திருச்செந்தூர் தாலுக்கா ஆசிரியர் யூனியன்)

"இந்திய அரசியல் சட்டப்படி ஏற்படுத்தப்படும் புதிய சென்னை சட்ட சபை கவுன்சிலுக்கு 72 ஸ்தானங்கள் இருக்கும். இவற்றில் 6 ஸ்தானங்கள் பட்டதாரிகள் தொகுதிகளிலிருந்தும் நிரப்பப்படும் ஆசிரியர் தொகுதிகளிலிருந்தும் 6 ஸ்தாபனங்கள் நிரப்பப்படும், இந்தத் தொகுதிகளுக்கு தாலுக்கா வாக்காளர் ஜாபிதாக்களைத் தயாரிக்கும்படி உப தாலுக்கா அதிகாரிகளுக்கு சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர்.

ஆசிரியர் தொகுதிகளில் வோட்டராவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள யோக்யதாம்சங்கள் வருமாறு: 1-4-50-ந் தேதிக்கு முன் குறைந்தது 3 வருஷமாவது செகண்டரி ஸ்கூல் அந்தஸ்துக்குக் குறையாத பள்ளிகளில் 1-வது பாரத்திற்குக் கீழ்ப்படாமல் இருக்கும் வகுப்புகளின் ஆசிரியராய் இருந்திருக்கவேண்டும். செகண்டரி பள்ளிகளில் பிரைமரி வகுப்பு ஆசிரியர்கள் வோட்டர்களாக உரிமை கிடையாது"

சென்னை சர்க்கார் ஆசிரியர்களுக்கு 6 ஸ்தானங்கள் கொடுக்க முன் வந்தது பற்றி யாவரும் மகிழ்வதோடு நன்றியும் செலுத்துவார்கள். ஆனல் வோட்டராவதற்கு விதித்திருக்கும் விதிதான் விசனிக்கத் தக்கது. யாவரும் ஓர் குலம். யாவரும் ஓரினம் என்று பாரதியார் பாடிப் போனர். வகுப்புவாதத்தையொழித்துவிட்டதாகக் காங்கிரஸ் சர்க்கார் பெருமை பேசுகிறது. ஆனல், நடை முறையில் நடப்பது என்ன? தொழில் முறையிலும் வகுப்புவாதமா? ஆசிரியர்கள் யாவரும் சேர்ந்து ஆசிரியப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தால் என்ன ஆபத்து நேர்ந்துவிடும்? ஆரம்ப ஆசிரியர் என்றும், உயர்தர ஆசிரியர் என்றும் பிரித்து ஆசிரியர்களின் ஒற்றுமையை ஏன் குலைக்க வேண்டும்? சட்ட சபை, ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அங்கத்தினராக நிற்கக் கூடாது என்று தடைசெய்யும் விதியை ரத்துச் செய்ய வேண்டும் என்று ஆரம்ப ஆசிரியர்கள் கிளர்ச்சி செய்துகொண்டிருக்கையில், வெந்த புண்ணில் வேலுருவியதுபோல், ஆசிரியர் தொகுதிக்கு வோட்டராயிருப்பதற்கே அருகதை அற்றவர் என்று தடைவிதித்தால் ஆரம்ப ஆசிரியர்கள் மனம் கொதித்து அரசாங்கத்திடம் வெறுப்படையாமல் வேறு என்ன செய்வது?

ஆரம்ப ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்கள் ஏட்டில் அடங்கா. நமது சர்க்கார் விலைவாசிகள் ஏற்றத்தைக் கவனித்து யாவருக்கும் சம்பளம் நிர்ணயம் செய்த காலத்தில், குறைந்தபட்ச சம்பளம் ஆரம்ப ஆசிரியர்களுக்கு மாதம் ரூ. 30 என்று நிர்ணயித்தனர். இந்த ரூபாய் 30-ம் இன்றும் கொடுத்தபாடில்லை. இவ்வளவு குறைவான சம்பளம் வேறு எந்த இலாகாவிலும் கிடையாது. சம்பளம்தான வேண்டாம், சமூகத்திலாவது, அரசியலிலாவது அந்தஸ்து உண்டா? அதுவும் இல்லை.

ஒருவன் S.S.L.C. படித்து இரண்டு வருடங்கள் போதனா முறைப் பள்ளியிலும் பயின்று செகண்டரி கிரேடு ஆசிரியனாக வெளிவந்து ஓர் செகண்டரி பள்ளியில் புகுந்தால் மாதம் ரூ 45-ம், அதே ஆசிரியர் எலிமெண்டரி பள்ளியில் நுழைந்தால் மாதம் ரூ. 35-ம் சம்பளமாம். என்னே இந்த வித்தியாசம்? கட்டிடம் செய்த பாவம் போலும். ஓர் செகண்டரி கிரேடு ஆசிரியர் உயர்நிலைப் பள்ளியில் முதலாவது பாரத்துக்குக் கற்றுக் கொடுத்தாலும், சட்டசபை, ஸ்தலஸ்தாபனங்களுக்கு நிற்கும் யோக்யதை பெற்றுவிடுகிறார். அதே ஆசிரியர் ஒரு ஹையர் எலிமெண்டரி ஸ்கூலில் தலைமை ஆசிரியராய் இருந்தாலும், ஸ்தலஸ்தாபனங்களுக்கு நிற்கும் யோக்யதை பெற முடியாது.

ஆரம்ப ஆசிரியர் என்று பெயரிட்ட ஒரு காரணத்தால் ஆசிரியர் தொகுதிக்குத் தேர்ந்தெடுக்கும் வோட்டுரிமையும் பறிக்கப்படுகிறது.

ஆரம்ப ஆசிரியர், ஆசிரியர் குலத்தினின்றும் வேறுபட்டனரோ? காரணத்தை ஆண்டவன்தான் அறிய வேண்டும். இக்காரணம் பற்றியே சுயமதிப்புள்ள எவனும் இத்தொழிலைத் தீண்டுவதில்லை. இந்நிலை நீடிக்கப் படுமாயின் ஆரம்பக்கல்வி பாதிக்கப் படுமென்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. ஒரே கிரேடு ஆசிரியர்கள் எங்கு வேலை செய்தாலும் ஒரே விகித சம்பளமும், ஆசிரியர்கள் யாவருக்கும் ஒரே விகித அந்தஸ்தும், வழங்கப் படாதவரை கல்வி சீர்திருத்தம் எவ்வித நற்பயனையும் கொடாது.

ஆரம்ப ஆசிரியர்களே! உறக்கத்தினின்றும் விழித்தெழுமின். கூட்டங்கள் கூட்டி, தீர்மானங்கள் நிறைவேற்றி ஆசிரியர் தொகுதிக்கு வோட்டராகும் உரிமையையும் அத்தொகுதிக்குப் போட்டியிடும் உரிமையையும் பெறுங்கள். வெற்றி நமதே.

நாணயம்.

29 MAY 1955
MADRAS

(வித்துவான். வை. சுப்பிரமணியம்,)
தலைமைத் தமிழாசிரியர் நகராண்மை உயர் நிலைப் பள்ளி, சேலம்

மக்கள் மிகுதியாக நாணயங்களைப் பயன்படுத்துகின்றனர். ஆயினும் அதன் வரலாற்றைத் தெரிந்தவர் மிகச்சிலரே. தற்கால நாகரீக வளர்ச்சிகளில் ஒன்றாக விளங்குவதும், அவ்வளர்ச்சிக்குக் காரணமாக இருந்ததும் நாணயமேயெனின் மிகையாகாது.

நாணயம் என்னும் சொல் செம்பு, நிக்கல், வெள்ளி, தங்கம் முதலியவைகளைக் கொண்டமைக்கப்பட்ட குறிப்பிட்ட நிறை, மாற்று, மதிப்பு அடங்கிய அத்தாட்சி பெற்ற உலோகத்துண்டுகளையும், காகிதங்களால் வெளியிடப்பெறும் தாள் நாணயங்களையும் (Currency Notes) குறிக்கும். மற்றும் நாணயம் என்னும் சொல், உவம ஆகு பெயராக மனிதரிடத்துக்காணும் ஒழுக்கமாகிய நற்பண்பையும் குறிக்கும். “இவன் நாணயமுடையான்” எனின் எல்லாவிடங்களிலும் ஒப்ப மதிப்பை வழங்கும் நாணயம் போன்று எல்லோராலும் மதிக்கத்தக்க நம்பிக்கை வாய்ந்தவன் என்று பொருள் படுகிறது. இனி நாணயத்தின் வரலாற்றை அறியத் தொடங்குவோம்.

மக்கள் தோன்றிய நெடுங்காலத்துக்குப் பின்னரே நாகரீகம் வாய்க்கப் பெற்றனர் என்பது வெள்ளிடை. ஆதியில் மக்கள் விலங்குகள்போன்று இயற்கையாகக் கிடைத்த காய் கனிகளையும், கிழங்குகளையும் உண்டு வாழ்ந்தனர். மக்களின் தொகை பெருகவே விளைபொருள்களும், விலங்கினங்களும் அருகின. இதனால் பயிரிடல், விலங்கினங்களை வளர்த்தல், போரிடல் முதலாகத் தொழில்கள் பல்கின. இடம் சூழ்நிலை காரணமாகப் பயிரிடல், நெய்தல், கருவிகள் செய்தல், முதலிய ஒவ்வொரு தொழிலையும் ஒவ்வொருவர் சிறப்பாகக் கைக்கொண்டனர். இதனால் ஒருவர் இயற்றும் பொருள் மற்றொருவருக்குத் தேவைப்பட்டது. அங்ஙனம் வேண்டும்போது, தம்பொருளைப் பிறர்க்குக் கொடுத்துப் பிறர் பொருளைத் தாம் மாற்றிக் கொள்ளலையே ‘பண்டமாற்று’ என்கிறோம். அங்ஙனம் பண்டமாற்று நிகழ இரு அடிப்படை உணர்வுகள் வேண்டும். (1) பொருளை மதித்தறியும் உணர்வு. (2) ஒன்றற்கொன்றுள்ள ஒப்புமை உணர்வு. இவ்வுணர்வுகள் இருந்தால்தான்

தம்பொருளைப் பிறர்க்குக் கொடுத்து அதே மதிப்புள்ள பிறர்பொருளைப் பெறமுடியும். இரு பொருளின் மதிப்பை ஒப்பிட்டு வரையறை செய்தல் மனத்தின் கண்ணே நிகழ வேண்டுவதொன்று. எனவே இவ்விரு பொருளுக்கும் வேறான பொதுப் பொருள் ஒன்று இருப்பின், அதனுடன் ஒப்பிட்டு மதிப்பிடல் எளிதாகும். உதாரணமாக ஒருபடி அரிசிக்கு ஐந்து மாங்கனி என்பதைவிட ஒருபடி அரிசியின் விலை பத்தணா, ஒரு மாங்கனியின் விலை இரண்டணா என்றாகிவிட்டால் பண்டமாற்று எளிதாகும். மற்றும் பொதுப் பொருளாகிய மதிப்புக் கருவி இல்லையேல், முருகனுக்கு வேண்டும் பொருள், வழுதியிடமும், வழுதிக்கு வேண்டும் பொருள் முருகனிடமும், இருந்தால்தான் பண்டமாற்று நிகழும்; இல்லையேல் ஒவ்வொருவரும், தமக்கு வேண்டும் பொருள் கொடுப்போரும், தம் பொருள் பெறுவோரும் ஆகிய ஒருவரைத் தேடிச்செல்லல் வேண்டும். அங்ஙனமின்றி இருவருக்கும் எப்போதும் பயன்தரத்தக்க பொதுப் பொருள் ஒன்று இருப்பின் இத்தொல்லைகள் குறையுமன்றோ? இதனால் பண்டமாற்றில் பொதுப்பொருள் பெரிதும் பயன்படுகிறதென்பதை உணர்கிறோம்.

பண்டைக்காலத்து இங்ஙனம் பொதுப்பொருளாக—நாணயமாக—நெல், சர்க்கரை, உப்பு, புகையிலை, பசு, தோல், பலகறை, இரும்பு, கற்கள், முதலியவைகள் வழங்கி வந்தன. இவைகளுள் பசுவே மிகுதியான நாடுகளில் நாணயமாக வழங்கப்பட்டது. பொதுப்பொருளாக வழங்கும் பொருள்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்லுதற்கும் பாதுகாத்தற்கும் எளிமையாகவும் நாட்பட இருப்பினும் அழியாததும் நிலையான மதிப்புடையதாகவும் இருத்தல் வேண்டும். பசுக்கள் காத்தல் செலுத்தல் ஆகிய தொல்லைகளைத் தருதலோடு நிலையான மதிப்புடையதல்லாதவை யாயிருந்தமையின், நிலையான மதிப்பு முதலிய பொதுப் பொருளுக்கு வேண்டும் இலக்கணம் அனைத்தும் அமையப்பெற்ற உலோகங்களே நாணயங்களாக வழங்கத்தலைப்பட்டன.

கி. மு. 4000 ஆண்டுகளுக்கு முன்னரே இந்தியா, சீனா, பாபிலோன் முதலிய நாடுகளில் பொன் நாணயங்கள் வழங்கின என்றும், கி. மு. 2000-த்தில் இத்தாலியில் செம்பும், மலேயாவில் தகரமும், எகிப்தில் வெண்கலமும், கிரீஸில் இரும்பும் வழங்கின என்றும் வரலாற்றால் அறியக்கிடக்கிறது. இறுதியில் எல்லா நாடுகளும் கிடைத்தற்கரிய

னும், சிறிய உருவில் பெரிய மதிப்பும், எல்லோராலும் விரும்பப்படும் தன்மையும், நெடுங்காலமாயினும் அழகு குன்றாமலும் அழிவுபடாமலும் இருக்கும் இயல்புகளைப் பெற்றதுமான பொன் வெள்ளிகளையே நாணயமாக வழங்கத் தொடங்கினர். மேலும் அவைகள் எவ்விடங்களில் கிடைப்பினும் ஒரே இயல்புடையனவாகவும் பிரிக்கவும், கூட்டவும், உருக்கவும், முத்திரை இடவும் வாய்ப்புடையனவாகவும் விளங்கின. இவ்விலக்கணங்களால் பொன், வெள்ளிகளே பண்டமாற்றுக்குரிய பொதுப் பொருள்கள் ஆயின.

பொன், வெள்ளிகள் இவ்விலக்கணம் அனைத்தையும் பெற்றிருப்பினும் பசு முதலியவைகளைப்போல எண்ணிக் கொடுத்தற்கு இயையாமையானும், சிறிய உருவில் பெரிய விலை உடையனவாக இருந்தமையானும் நிறுத்துக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதற்காகவே தராசு கண்டு பிடிக்கப்பட்டிருக்க வேண்டுமென்பது சிலர் கருத்து. நிறுத்தற்கு வேண்டிய அளவுக் கருவிகள் பற்பல இடங்களிலும் வேறுபட வழங்கினமையால் வணிகத்தில் உண்டாகும் தொல்லையைத் தவிர்க்க எல்லா இடங்களிலும் ஒரே நிறையுள்ளதாக இருக்கும் சில தானியமணிகளை அடிப்படை நிறைப் பொருளாகக் கொண்டனர். இங்ஙனம் வழங்குவன குன்றி, காணம், உளுந்து முதலியன. பாபிலோனியர், எகிப்தியர், கிரேக்கர்கள் ஆகியோரும் தானியங்களையே அடைப்படை நிறைப் பொருளாகக் கொண்டுள்ளனர். தற்காலத்து வெள்ளி ரூபாயும் 180 தானியமணிகளின் நிறையைக் கொண்டதே ஆகும். பொற்கம்மியர் இன்றும் குன்றிகளை நிறைப்பொருளின் கீழெல்லையாகப் பயன்படுத்துகின்றனர். சங்க நூலாகிய பதிற்றுப் பத்துள் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை தன்னைப் புகழ்ந்து பாடிய அரிசில் கிழார்க்கு "தானும் கோயிலாலும் புறம் போந்து நின்று கோயிலுள்ளவெல்லாம் கொண்மின் என்று காணம் ஒன்பது நூறாயிரத்தோடு அரசுகட்டிற்கொடுப்ப" என்ற தொடரிற்காணும் "காணம்" என்ற சொல் ஒரு தானியமணியின் நிறை அளவையைக் கொண்ட பொன் நாணயம் என்பது அறியத்தக்கது.

இங்ஙனம் பண்டமாற்று நிகழும் போதெல்லாம் உலோகங்களின் நிறையையும் மாற்றையும் அளந்து அறிய வேண்டுவது அவசியமானமையின் வணிகரின் காலமும் உழைப்பும் வீணாயின. எனவே சில வணிகர் நிறையையும் மாற்றையும் கணக்கிட்டு சிறுசிறு கட்டிகளாக்கி அதில் தம் முத்திரையைப் பொறித்து, கட்டி

களை எண்ணிக் கொடுத்து வந்தனர். இங்ஙனமாகக் கட்டிகளை எண்ணிக்கொண்டாலே போதுமானதாய் இருந்ததை அறிந்த சிலர் நிறை குறைந்தவையும் போலியும் ஆகியகட்டிகளை உபயோகித்துப் பொது மக்களை வஞ்சித்தனர். இதனால் அரசாங்கத்தார் நாணயம் செய்யும் உரிமையைத் தாமே கைக்கொண்டு சதுரமான உருவில் ஓரம் முழுப வரைகளை இட்டு வழங்கினர். நாளடைவில் சதுரம் வட்டமாக மாறியது. நாடு முழுவதும் ஒரே வகை நாணயங்கள் வெளியிடப்பட்டன. இதுகாறும் நூற்று எழுபத்திரண்டு வகையான பொற்காசுகளும், 343 வகையான வெள்ளிக்காசுகளும்' கணக்கற்ற செப்புக்காசுகளும் வெளியிடப்பெற்றிருக்கின்றன.

இவ்வாறு நாணயம் வெளியிடும் உரிமையை அரசன் கைப்பற்றியபின் அது உலோக மதிப்பைச் சார்ந்ததாக இல்லாமல் அரசன் குறிக்கும் மதிப்பையே சார்ந்திருந்தது; இதனால் நாணயம் அகமதிப்பு, புறமதிப்பு என்ற இருமதிப்பைப் பெற்றது. அகமதிப்பு என்பது நாணயத்தில் இருக்கும் உலோகத்தின் [illegible] மதிப்பு என்பது நாணயத்தின் மேல் பொறிக்கப்பட்டிருக்கும் மதிப்பு. எடுத்துக் காட்டாக கி. மு. 6-ம் நூற்றாண்டில் [illegible] சர்வாதிகாரியான சோலோன் என்பவர் தம் நாட்டு வெள்ளி நாணயங்களின் நிறையிற் கால்வாசியைக் குறைத்து வழங்கினர். இந்திய மன்னராக இருந்த துக்ளக் அரையணு மதிப்புள்ள செப்புக் காசுகளை ஒரு ரூபாயின் மதிப்புக்குச் சமமாக வழங்க வேண்டுமென்று கட்டளை இட்டார். இவ்விரு எடுத்துக்காட்டுகளாலும் நாணயமே உலோகத்தால் இயன்றதாயினும் அதற்கு மன்னன் இடும் மதிப்பே செல்லத்தக்கது என்பதும், உலோக மதிப்பிற்கும் நாணய மதிப்பிற்கும் தொடர்பில்லை என்பதும் வெளிப்படுகின்றது.

இங்கிலாந்து, ஸ்காட்லந்து முதலிய இடங்களிலிருந்த உண்டியற் கடைக்காரர்கள் (Bankers) தங்களிடம் ஈடாக வைத்துப்பெறும் நகைகளுக்குக் கொடுக்கும் பற்றுச் சீட்டுகள் (Receipt) நாணயம்போல மதிக்கப் படுதலைக்கண்டு, தம் நம்பிக்கையையே முதலாகக் கொண்டு பற்றுச்சீட்டுகள் (Change) வழங்கி அதற்கு வட்டியும் பெற்றனர். இது கண்ட அரசியலார் த[illegible] நாணயங்களைத் தனிப்பட்டவர்கள் வெளியிட [illegible] எனத் தடுத்துத் தாங்களே வெளியிட்டனர். வேண்டும்போது தான் நாணயங்களுக்கு உலோக நாணயங்கள் மாற்றிக்கொடுக்கப்பட்டு வந்தமையின் தான் நாணயங்களும் உலோக நாண

யங்கள் போலவே வழங்கி வந்தன.

இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா, ரஷ்யா முதலிய நாடுகள் பலமுறை மிகுதியான தாள்நாணயங்களை வெளியிட்டமையின் தாள் நாணயங்கள் மதிப்பை இழந்தன. கி. பி. 1861-ல் அமெரிக்காவில்வெளியிடப்பட்ட 'கிரீன்பாக்ஸ்' என்ற தாள் நாணயமும் மதிப்பையிழந்துமயிர் விளைஞர்கடையை அழகு செய்யவும் பொட்டலம் கட்டவும் பயன்பட்டது. ஐரோப்பியர் போருக்கு முன் ரஷ்யாவில் வெளியிடப்பெற்ற ஒரு லட்சம் கோடி மார்க்தாள் நாணயத்தைக் கொடுத்து ஒரு (பார்க்) தங்க நாணயத்தைப் பெறும் தன்மையாக இருந்து இறுதியில் அதுவும் அழிந்தது.

இங்ஙனம் மிகுதியாகத் தாள் நாணயங்களை வெளியிடுவதால் வரும் கேடுகளைப் போக்கவும் தாள் நாணயமதிப்பை நிலைநிறுத்தவும் 1844-ஆம் ஆண்டு இங்கிலாந்தில் ஒரு சட்டம் செய்யப் பட்டது. 140 லட்சம் பவுன் வரை ஈடில்லாது தாள் நாணயங்களை வெளியிடலாம் என்றும் அதற்குமேல் வெளியிடும் தாள் நாணயங்களுக்குத் தங்கத்தை ஈடாக மத்தியப் பாங்கியில் வைக்கவேண்டுமென்பதே அச்சட்டத்தின் கருத்து. அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் இத்திட்டத்தைப் பின் பற்றி தம் நாட்டுத்தாள் நாணயங்களை ஒழுங்கு செய்து கொண்டன. இத்தகைய வரலாற்றைக் கொண்ட நாணயமே இன்று உலகத்தின் உயிராக நிலவி வருகிறது. இதனாலன்றோ வள்ளுவர் பெருமானும்

"பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்லதில்லைப் பொருள்"

என்று கூறியுள்ளார்.

அறிவுக் கதிர்

சட்டங்களுக்குப் பணிந்து நடப்பது, வரிகளை ஒழுங்காகச் செலுத்துவது அரசாங்கத்திற்குத் துரோகம் செய்யாதிருத்தல் ஆகியவை மாத்திரம் தனி நபரின் கடமைகளா என்று கருதக் கூடாது. எது சரியோ அதைத் தெரிவிப்பதோடு அமுல் நடத்தவும் வேண்டும். எது தீயதோ அதைக் கண்டுபிடிப்பதோடு முறியடிக்கவும் வேண்டும். அதுதான் பொது ஜனக் கடமை.

—எட்மண்டுபர்க்

நான் விரும்பும் தொழில்

(அருளானந்தன்,)

[குகை சமரச சன்மார்க்க சங்கம் 1948–ல் நடத்திய "திருக்குறள்" சொற்பொழிவுப் போட்டியில் பரிசு பெற்றது.]

உயர் திருவாளர் தலைவர் அவர்களுக்கும் பெரியோர்களுக்கும் எனது வணக்கம்!

இன்று இங்கு திருவள்ளுவர் நினைவு விழாவிற்காக நடக்கும் இச்சொற்பொழிவுப் போட்டியிலே பேச சிறுவர்களாகிய எங்களுக்கு மூன்று தலைப்புகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஒன்று "மதம்" இரண்டு நல் வழி" மூன்று "நான் விரும்பும் தொழில்" என்பன. இவற்றுள் முதலாவதாகியமதத்தைப்பற்றி சிறுவனுகிய எனக்கு ஒன்றும் அதிகம் தெரியாதாகையால் நான் அதை விட்டுவிடுகிறேன். இரண்டாவதாகிய நல்வழியைப் பற்றியும், பெரியவர்கள் சிறியவர்களுக்கு எடுத்துக்கூற வேண்டுமே ஒழிய எங்களுக்கு அதிகமாய் ஒன்றும தெரியாதாகையால் அதையும் விட்டு விட்டு, மூன்ருவதாகிய நான் விரும்பும் தொழில் என்பதை எடுத்துக்கொள்ளுகிறேன்.

நான் விரும்பும் தொழில் என்ருல் நான் பிரியமாக செய்ய ஆசைப்படுகிற வேலை என்று பொருள். நாம் ஒரு வேலையைச் செய்வதற்குமுன் இது நம்மால் செய்யக் கூடியதா? சுலபமானதா? அதிக மான நன்மையைத் தரக்கூடியதா? இதனால் நமக்கும், நாட்டுக்கும் நன்மையுண்டா? புண்ணியமான தொழிலா? என்றெல்லாம் ஆராய்ந்து, பார்த்துக் கொள்ள வேண்டும்.

இதுபோல நான் ஆராய்ந்து பார்த்ததில் இரண்டு தொழில்கள் தான் எனக்குத் தெரிகிறது ஒன்று உபாத்திமைத் தொழில். இரண்டு சொற்பொழிவாற்றும் தொழில். இந்த இரண்டிலும்கூடச் சிறந்தது சொற்பொழிவாற்றுதலே! ஏனென்ருல் உபாத்திமைத் தொழிலிருந்து நம் மனக் கருத்துக்களை எல்லாம் தங்கு தடையின்றி எடுத்துக் கூற முடியாது அதிகாரிகளுக்குப் பயந்தும், அடங்கியும் இருக்க வேண்டி நேரும். ஆனல் சொற்பொழிவாளனுக இருந்தால் தன் மனத்திலுள்ள கருத்தைத் தங்கு தடையின்றி எல்லோருக்கும் எடுத்துக் கூறலாம்.

இனி சொற்பொழிவாற்றும் தொழில் செய்வதற்கு எளிமையானதா என்றும், பயனுடையதா என்றும் ஆராய்வோம்.

சொற்பொழிவாற்றும் தொழில் எளிமையானதுதான். திருக்குறள் "சொல்லுதல்

யார்க்கும் எளியவாம்'' என்று கூறுகிறது. உதாரணமாக தாம் நல்ல வழியில் நடக்கத் தக்க மனவுறுதி இல்லாதவர்கள் கூடத் தீய வழியில் நடப்பவர்களைப் பார்த்து உங்கள் ஒழுக்கம் தவறுனது. நீங்கள் திருத்த வேண்டும் என்று பல சிறந்த நூல் ஆதாரங்களைக் காட்டித் திருத்தி விடலாம். அதனுல் சொற்பொழிவாற்றுதல் மிகச் சுலபமானது தான்.

அடுத்தபடியாக இதை நம்மால் செய்ய முடியுமா? என்று ஆலோசித்தால் முடியும். மாணவர்களும், கற்றவர்களும் கட்டாயம் இதைச் செய்யவேண்டுமென்றும், இது அவர்கள் கடமை என்பதையும்,

அவையஞ்சி மெய்விதிப்பார் கல்வியும்
கல்லார் அவையஞ்சா ஆகுலச் சொல்லும்,
பூத்தலிற்பூ வாமை நன்று''

எத்துணைய ஆயினும் சொல் வன்மை இல்லாத கல்வி இல்லையாகும் என்று நல் வழியும், "இணரூழ்த்து நாறாமலரனையர் கற்ற துணர விரித்துரையாதார்'' என்று திருக்குறளும் கூறுகிறது. ஆகையால் இத் தொழில் என்னைப் போன்ற மாணவர்களுக்கும் ஏற்றது என்பதை அறிகிறேன்.

இத்தொழிலால் நமக்கும் நாட்டுக்கும் நன்மையுண்டா என்று ஆராய்வோம்.

சொற்பொழிவு செய்வோர் பல இடங்களுக்குப் போக வேண்டி நேரும். அதனுல் சொற்பொழிவாளர் பல இடங்களைக் காணவும், பலருடன் பழகவும், உலகியல் அறிவைப் பெறவும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. பல பெரிய மனிதர்களுடன் பழகுகிறுர்கள். அதனுல் அவர்களும் பெரிய மனிதர் ஆகிறுர்கள். சொற்பொழிவாளர்களுக்கும் எவ்விடத்திலும் நல்ல மரியாதையும் வரவேற்பும் உபசரிப்பும் உண்டு. நம் நாட்டிலுள்ள சில சொற்பொழிவாளர்கள், 10,100,1000 ரூபாய் வரைக்கும் பணம் வாங்கிக் கொண்டு பிரசங்கம் செய்கிறுர்கள். உதாரணமாக சமீபத்தில் நமது ஊர் சிவன் கோவிலுக்கு வந்தவர் நூற்றுக் கணக்கான ரூபாய் பெற்றதாகக் கேள்விப்பட்டேன். இங்கிலாந்து அமெரிக்கா முதலிய மேல் நாடுகளில் பிரசங்கம் நல்ல இலாபமுள்ள தொழிலாக இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். சிலர் ஒரு சொற்பொழிவுக்கு நூற்றுக் கணக்கான பவுன் பெறுகிறுர்களாம். சொற்பொழிவாளர்கள் சொற்பொழிவு செய்வதற்காகத்தாம் பலபுத்தகங்களைப் படிப்பதால் நிறைந்த கல்வியைப் பெறவும், தம் மனக் கருத்தைத் தெளிவாகப் பிறருக்கு எடுத்துச் சொல்லவும், ஒன்றைப் பற்றி நன்கு வாதித்து அறியவும் வல்லவர்

கள் ஆகிறார்கள். ஆகையால் சொற்பொழிவு செய்வோருக்கு நன்மையுண்டு என்று தெரிகிறது.

அடுத்தபடியாக இத்தொழிலால் நமக்கே அன்றி நாட்டுக்கும் பயன் உண்டா என்று ஆராய்ந்தால் நாட்டுக்கும் நல்ல பயனுண்டு. இயந்திரத்தாலும், விஞ்ஞானத்தாலும், பணத்தாலும், படை பலத்தாலும், மிருகபலத்தாலும், வேறு பல வகையாலும் நம் நாட்டை அடக்கி ஒடுக்கி நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக அடிமைப் படுத்தி இருந்த வெள்ளையர்களை இந்நாட்டை விட்டு விரட்டியதும், நமக்கு சுதந்திரம் அளித்ததும் இந்நாட்டிலுள்ள பல தேசியவாதிகளின் சொற்பொழிவுதான். அறியாமையில் மூழ்கி இருந்த இந்தியர்களாய நமக்கு ஓரளவு கல்வியும், அரசியல் அறிவையும் கொடுத்து ஒற்றுமையுண்டாக்கியதும் பல சொற் பொழிவுகள்தாம். இன்னும், நம் நாட்டு மக்களிடம காணும அறியாமை, ஒற்றுமை இன்மை, சாதிமத வேறுபாடு முதலியவைகளைப் போக்கவும், நாட்டில் அன்பையும, ஆக்கத்தையும் பரப்பவும் இன்னும் அநேக சொற்பொழிவுகள் வேண்டியிருக்கின்றன. ஆகவே சொற்பொழிவு நாட்டுக்கு நன்மை செய்யக்கூடியது என்பதை நன்கு அறியலாம்.'

சொற்பொழிவு புண்ணியமான தொழில் என்று திருக்குறள் கூறுகின்றது.

> "அல்லவைதேய அறம் பெருகும்
> நல்லவை நாடி இனிய சொலின்".
> "சிறுமையுள் நீங்கிய இன்சொல்
> மறுமையும் இம்மையும் இன்பந்தரும்.
> "திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்
> பொருளும் அதனினூங் கில்லை.

என்று கூறுகிறது. இனிய சொற்பொழிவே ஒருவனுக்கு அறத்தையும் மோட்சத்தையும் பொருளையும் கொடுக்கவல்லது என்பது இதன் பொருள்.

இன்னும் சொற்பொழிவாற்றுதலைக் காட்டிலும் பெரிய லாபம் தரக்கூடிய தொழில் வேறொன்றுமில்லை. "சொலல் வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை இகல்வெல்லல் யார்க்கும் அரிது", விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது சொல்லுதல் வல்லார்ப்பெறின்" என்று திருக்குறள் கூறுகிறது. இதன் பொருள் : நல்ல சொல்லாற்றல் படைத்தவனை யாராலும் வெல்ல முடியாதென்பதும், சொல்லாற்றல் படைத்தவன் சொல்லும் வேலையை உலக

(18- பக்கம் பார்க்கவும்)

பெனிஸிலின்

மந்திர மருந்து என்று பலர் புகழும் பெனிஸிலினைப் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். மிகவும் கீழ் நிலையிலுள்ள நுண்ணிய ஜீவன்கள் சுரக்கும் ஒருவகை ரசாயனப் பொருள் இது என்பதும் இது மனித உடலைத் தாக்கும் பல வியாதிக் கிருமிகளை அழிக்கின்றது என்பதும் ஆச்சரியமானது. சுருங்கச் சொல்லில் ஒரு வகை கீழ் நிலை ஜீவன்கள் மனித சமூகத்துக்கு ஐந்தாம் படையாக உதவுகின்றன.

ஈரமான சுவர், தோல் சாமான், தின்பண்டங்கள் முதலியவற்றின் மேல் சாம்பல் நிறமான ஒரு தூள் படருவதை நாம் பார்த்திருக்கிறோம். இதைப் பூஞ்சாக்காளான் என்று நாம் சொல்வோம். ஆங்கிலத்தில் இதை மோல்டு என்று சொல்லுகிறார்கள். பூதக்கண்ணாடி அல்லது சக்தி வாய்ந்த லென்சு மூலமாக இதைப் பார்த்தால் அழகிய தாவரம்போல் இது தோன்றும். மோல்டின் மேல் பாகத்தில் தாவரத்தின் மலர்கள் போன்று உருண்டையான குமிழ்கள் காணப்படும். குமிழுக்குள் சில பொடிகள் காணப்படும். இதைப் பூஞ்சாக்காளானின் வித்து என்று சொல்லலாம். ஆங்கிலத்தில் இதை ஸ்போர் என்று சொல்கிறார்கள்? இந்த ஸ்போர் காற்றில் பறந்து பரவுகிறது. பூஞ்சாக்காளானில் 10,000க்கு மேற்பட்ட வகைகள் உண்டு. இது ஒரு வகை கீழ்நிலை உயிர் வர்க்கம்.

1929-ல் அலெக்சாந்த பிலமிங் என்ற டாக்டர் இங்கிலாந்தில் செயிண்ட் மேரி ஆஸ்பத்திரியில் வியாதியை உண்டாக்கும் கிருமிகளைப் பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார். பல தட்டுகளில் தகுந்த உணவுத்திரவத்தில் பல வகையான கிருமிகளை வளர்த்திருந்தார். அந்தத் தட்டுஒன்றில் ஒரு பூஞ்சாக்காளானின் ஸ்போர் காற்றிலிருந்து தற்செயலாக விழுந்தது. தட்டில் அது விழுந்த இடத்துக்கு அருகே வியாதிக் கிருமிகள் வளர்ச்சி அடைவதும் விருத்தியடைவதும் தடுக்கப்பட்டிருந்தது. டாக்டர் பிலமிங் இதைப் பார்த்தார். ஸ்போரிலிருந்து பூஞ்சாக்காளான் வளர்ந்து பூஞ்சாக்காளான் சுரந்த ஒரு ரசாயனத் திரவமே இதற்குக் காரணம் என்று அவர் அனுமானித்தார். இதை உண்டாக்கிய பூஞ்சாக்காளானுக்கு பெனிசிலியம் என்று பெயர். அது சுரந்த ரசாயனப் பொருளுக்கு பெனிஸிலின் என்று அவர் பெயரிட்டார்.

அக்காலத்தில் டாக்டர் பிலமிங்கு இது விஷயமாக அதிக ஆதரவு அளிக்கப்படவில்லை. பெரும் அளவில் பெனிசிலின் தயாரிக்கவும் அதைச் சுத்தப்படுத்தவும் அவரிடம் கருவிகள் இல்லை. ஆயினும் அவர் அந்த பூஞ்சாக்காளானை மட்டும் அழித்துவிடாமல் வளர்த்துக் கொண்டே வந்தார்.

யுத்தத்தில் காயமடைந்தவர்களுக்கு மந்திரத்தைப்போன்ற சிகிச்சையை இது செய்ய வல்லது என்று அறிந்து இரண்டாம் மகாயுத்தம் ஆரம்பமாகும்போது இது விஷயமாக இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் அதிக கவனம் செலுத்தினர்.

காயத்தை ஆறாமல் தடுக்கும் கிருமிகளை பெனிஸிலின் கொல்கிறது. மேலும் கபவாதம், மூளை ஜுரம், ஸ்திரீகள் சம்பந்தமான தீய நடத்தையால் உண்டாகும் கோனேரியா, சிப்பிலிஸ் வியாதிகள் இவற்றை பெனிஸிலின் எளிதில் குணப்படுத்துகிறது. ஆனால் பித்தவாதம் கூடிய ரோகம், பிளேக், இன்புளுவன்சா ஜுரம் ஆகியவற்றை உண்டாக்கும் கிருமிகளின் மீது பெனிஸிலினின் சக்தி பிரயோஜனப்படுவதில்லை.

[16-பக்கம் தொடர்ச்சி]

மெல்லாம் கேட்கும் என்பதும் ஆகும். மேலும் நம் நாட்டிலுள்ள பல சிறந்த தேசத் தலைவர்கள் முதலில் மிகச் சாமானியராயிருந்து சொல்லாற்றல் காரணமாகவே மேல் நிலையை அடைந்திருக்கிறார்கள். மேல் நாட்டிலும், ஹிட்லர், முசோலினி; டிவேலரா, ட்ரூமன, லெனின் முதலிய பல தலைவர்கள் மிகக் கீழ் நிலையிலிருந்து அரசரைப்போன்ற அளவுக்கு மேல்நிலை அடைவதற்குக் காரணமாக இருந்தது சொல்வன்மையே!

ஆகையால் சொல்வன்மை மிக்க சிறந்த நன்மையைத் தருவது என்பதில் சந்தேகமில்லை.

மேற்கூறியவைகளினால் சொற்பொழிவாற்றும் தொழில் சுலபமாகப் பலனளிக்கக் கூடியதென்பதும், சொற்பொழிவு ஆற்றுவோருக்கும், நாட்டுக்கும் நன்மை அளிக்கக் கூடியதென்பதும் விளங்குகிறது.

மேற்கூறிய காரணங்களினால் நான் சொற்பொழிவாற்றுந் தொழிலை விரும்புகிறேன். நான் உலகத்தில் ஒப்பற்ற ஒரு பெரும் பேச்சாளனாக வேண்டும் என்பதும் அதனால் எனக்கும் என் நாட்டுக்கும், சேவை செய்ய வேண்டும் என்பதும் என் விருப்பம்.

ரணத்தைக் குணப்படுத்த உபயோகப்படும் சல்பனமைட் மாத்திரை போன்றவற்றிற்கும் பெனிசிலினுக்கும் ஒரு பெரிய வித்தியாசம் உண்டு. சல்பனமைட் மாத்திரை ரணத்தைக் குணம் செய்யும். ஆயினும் அதிகமாகச் சாப்பிட்டால் மனிதனின் உடலிலுள்ள ஜீவ அணுக்களைப் பாதிக்கும். பெனிஸிலின் மனித உடலைக் கிஞ்சித்தும் பாதிப்பதில்லை.

டாக்டர் பிலமிங் ஆராய்ச்சி செய்தபோது பெனிஸிலின் வியாதிக் கிருமிகளைக் கொல்கிறது என்று கருதப்பட்டது. பல வருஷங்கள் சென்று ஆராய்ச்சிசெய்த ஆக்ஸ்போர்டு டாக்டர்கள் பெனிஸிலின் வியாதிக் கிருமிகளைக் கொல்வதில்லையென்றும் விருத்தியடைவதையே தடுக்கிறது என்றும் கருதினார்கள். ஆனால் இரண்டு அபிப்பிராயங்களும் சரியென்றே இப்பொழுது கருதப்படுகிறது. முதிர்ந்த வியாதிக்கிருமிகளை விருத்தியடையாமல்பெனிஸிலின் தடுக்கிறது. புதிதாகப் பிறந்த வியாதிக் கிருமிகளை பெனிஸிலின் கொல்கிறது.

ரணகாயங்களைக் குணப்படுத்த பெனிஸிலின் மிகச் சிறிதளவு கரைந்த நீரைக்கொண்டு காயத்தைச் சுத்தம் செய்யவேண்டும். பெனிஸிலின் சிறிதளவு கலந்த பவுடர்களும் உபயோகிக்கப்படுகின்றன. தோல் புண்களுக்கு பெனிஸிலின் கலந்த கிரீம் களிருக்கின்றன. மற்ற வியாதிகளுக்கு ஊசி போட்டு சிகிச்சை செய்கிறார்கள். தொடர்ந்து ஊசி போட்டுக்கொள்வதால் உண்டாகும் தேக சிரமத்தோடு ஒப்பிட்டால்பெனிஸிலின் உள்ளுக்குச் சாப்பிடுவது தான் சிலாக்கியம். பெனிஸிலின் எவ்வளவு சாப்பிட்டாலும் தேகத்துக்கு அபாயமில்லையாயினும் வயிற்றிலுள்ள ஜடராக்னி அமில சம்பந்தம் உடையது ஆதலால் பெனிஸிலின் அதனால் கெட்டுப்போய் விடுகிறது. இதனால் ரத்தத்தில் கலக்கமுடிவதில்லை. இதற்காக மெல்லிய பையில் பெனிசிலினை வைத்து அப்படியே விழுங்குவது ஒரு வழி. உணவு ஜீரணமாக்கப்படும் போது தான் இரைப் பையில் ஜடராக்னி சுரப்பதால் வெறும் வயிற்றில் பெனிசிலினைச் சாப்பிடலாம் என்பது மற்றொரு வழி.

கடையில் பெனிஸிலின் மருந்து வாங்கும்போது அதன் அளவு லட்சக் கணக்கில் குறிப்பிட்டிருப்பதைப் பார்க்கிறோம். ஆக்ஸ்போர்ட் டாக்டர்கள் முதலில் பெனிஸிலின் திராவகத்தை எடுத்த போது ஒரு கன செண்டிமீட்டர் திரவத்தில் இருந்த பெனிஸிலின் ஒரு யூனிட் என்று கணக்கிட்டார்கள். திடரூபத்தில் மிக மிக அதிக சத்துள்ள பெனிஸிலின் தயாரிக்கப் பட்டபோது 1944 நவம்பர் மாதம்

லண்டனில் கூடிய டாக்டர்கள் இதே அளவைப் பின்பற்றுவது என்று தீர்மானித்தார்கள். இந்த அளவுப்படி அமெரிக்காவில் திடரூபத்தில் தயாரித்த பெனிஸிலின் 1 கிராம் எடை 1650000 யூனிட் அளவுள்ளது. ஒரு ரூபாய் எடை பெனிஸிலின் 1980000 யூனிட் அளவுள்ளது. தேகத்திற்கு ஊசி போட லட்சத்திலிருந்து ஐந்து லட்சம் யூனிட் உபயோகிப்பார்கள்.

ஸ்திரீகள் சம்பந்தமான கோனோரியா சிப்லிஸ் வியாதிகளை நீக்குவதற்கு 25000 யூனிட் ஒரு ஊசி போட்டால் போதுமானது என்று சொல்லப்படுகிறது. ரணம் காயம் கட்டி புண் சிலந்தி முதலியவற்றையும் பெனிஸிலின் சுலபமாகக் குணப்படுத்துகிறது.

பெனிசிலியம் என்ற பூஞ்சக்காளானை வளர்ப்பது சுலபம். குளூகோசும் சில உலோக உப்புகளும் கலந்த திரவத்தில் 70 F உஷ்ண நிலையில் இது வளர்கிறது. ஆனால் சுரக்கும் மிக மிகக் குறைந்த அளவு பெனிசிலினைப் பிரித்துசுத்தப்படுத்துவது மிகவும் கஷ்டமான வேலை.

இங்கிலாந்தில் பெனிஸிலின் தயாரித்தபோது நூற்றுக்கணக்கான கண்ணாடி பாட்டில்களில் பூஞ்சக்காளானை வளர்த்தார்கள். ஒவ்வொரு பாட்டிலும் பால் சீசாவைப்போன்றது. நன்ருகச் சுத்தம் செய்தபின் ஒவ்வொரு பாட்டிலிலும் 1000 கன சென்டிமீட்டர் உணவுத் திரவத்தை நிரப்புவார்கள் இந்தத் திரவம் ஒரு அங்குல உயரத்துக்கு தானிருக்கவேண்டும். ஏனெனில் வளரும் மோல்டுக்கு நிறையக் காற்று அவசியம். மோல்டு திரவத்தின்மேல் பரப்பில் மட்டும் வளரும். அதன் உஷ்ண நிலை 75 F ல் இருக்கவேண்டும். ஒவ்வொரு பாட்டிலிலும் 'ஸ்போர்' கலந்த ஒருவாரத்தில் பாட்டிலிலுள்ள உணவு முழுவதும் உபயோகப் பட்டுவிடும். பெனிசிலினை இப்பொழுது பிரிக்கவேண்டும். அதிலிருக்கும் பெனிஸிலும் குறைவே. 1000 கன சென்டிமீட்டர் திரவத்தில் 0 6 கிராம் பெனிசிலின்தானிருக்கும். தண்ணீரைப்பிரிக்க உஷ்ணப்படுத்த முடியாது. உஷ்ணப்படுத்தினால் பெனிசிலின் கெட்டுவிடும். ஆகையால் குளிர்ச்சி முறையில் நீரைப் பிரித்து சிக்கலான பல வழிகளில் சுத்தப்படுத்தி திடரூபத்துக்குக் கொண்டுவருவார்கள். திடரூபத்திலிருக்கும் பெனிசிலின் மஞ்சள் கலந்த பழுப்பு நிறமாயிருக்கும். இந்த முறையில் 100 பாட்டில்களை உபயோகித்தால் ஒரு லக்ஷம் யூனிட் பெனிஸிலின் ஒரு வாரத்தில் கிடைக்கும். சாதாரணமாக ஒரு மனிதனுக்கு ஒரு ஊசிக்கு உபயோகிக்கும் பெனிஸிலின் லக்ஷம் யூனிட். இந்த மோல்டுகளுக்குக் கிடை

த்த ஸ்போர் எல்லாம் முதலில் டாக்டர் விலமிங் தட்டில் தெய்வாதீனமாக விழுந்த முதல் ஸ்போரின் வளர்ச்சியால் கிடைத்ததே.

1940-க்குப் பிறகு யுனைடெட் ஸ்டேட்சில் பெனிசிலின் தயாரிக்க ஆரம்பித்தபோது பாட்டில்களுக்குப் பதிலாக பெரிய தொட்டியை உபயோகித்தார்கள். ஒவ்வொரு தொட்டியிலும் 16,000,00 காலன் ஸ்போர் வளரும் உணவுத் திரவம் கொட்டலாம். டாக்டர் காக்கில் என்பவர் திரவத்தின் மேல்பரப்பில் மட்டுமல்லாமல் திரவம் முழுவதும் வளரும் பெனிசிலியம் கோட்டாடம் என்ற மோல்டைக் கண்டுபிடித்தார். தொட்டிக்குள் காற்றை பம்பு மூலமாகச் செலுத்துவதால் திரவ முழுதும் மோல்டு வளர்கிறது. இம்முறையில் அதிக அளவு பெனிசிலின் தயாரிக்கிறார்கள்.

மாங்களைப் பெரிய பழங்கள் கொடுக்கும்படியும் பசுவை அதிகப்பால் கொடுக்கும்படியும் விஞ்ஞான முறையில் வளர்ப்பைக் கட்டுப்படுத்துவதுபோல் மோல்டு அதிக பெனிசிலின் கொடுக்கும்படியும் அதை வளர்க்கிறார்கள்.

1946-ல் உலக முழுவதும் உற்பத்தி செய்த பெனிசிலின் யூனிட் 25க்கு அப்பால் 12 பூஜ்யங்கள் போட்டால் கிடைக்கும் எண் ஆனால் ஒரு பவுண்டு எடையுள்ள பெனிசிலின் 792,000000 யூனிட் என்பதை ஞாபகத்தில் வைத்தால் இதன் எடை அதிகமிராது. உலக உற்பத்தியில் 85 சதம் யுனைடட் ஸ்டேட்சிலும் மீதி இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, கானடா ஆகிய நாடுகளிலும் பெனிஸிலின் உற்பத்தி செய்யப்படுகிறது. ரஷ்யாவில் உற்பத்தி செய்யும் பெனிஸிலின் புள்ளிவிபரம் தெரியாவிட்டாலும் அதன் சுயதேவைக்கு வேண்டிய அளவு உற்பத்தி செய்கிறது என்று கருதப்படுகிறது.

ராமாயண யுத்தத்தில் அநுமான் கொண்டுவந்த சஞ்சீவி யுத்தத்தில் இறந்தவர்களை உயிர்ப்பித்தது. 1929ல் டாக்டர் பிலமிங் கிருமி வளர்ச்சி தட்டில் தெய்வாதீனமாக விழுந்த பூஞ்சாக்காளானின் வித்து இரண்டாம் மகாயுத்தத்தில் ஆயிரக்கணக்கானவர்களின் மிக ஆபத்தான ரணகாயத்தைக்குணப்படுத்தி அவர்கள் உயிரைக் காப்பாற்றியது. ஒரு துளி அளவுகூட பெனிசிலினை 500 காலன் நீரில் கலக்கினாலும் நீர் கிருமிகளைக்கொல்லும்.

அறப்போர் புரிந்த ஆரணங்கு!

(மா. இளஞ்செழியன் B. A. (Hons) ஆசிரியர், போர்வாள்)

"அடி பேதைப் பெண்ணே! உனக்கேனடி இக் கெடுமதி? நீயா போரிடப் போகிறாய்?"

"ஆமாம்! நான்தான்! போரிடத்தான் போகிறேன்! ஏன்? முடியாதா என்னால்?"

"முடியாதா என்று கேள்வி வேறு கேட்கிறாயே? நீ பிறந்திருப்பது, போரிடத் தெரிந்த ஆடவர் குலம் அல்லவே!"

"போர், ஆடவர் குலத்தின் தனியுரிமை என்று உனக்கு யாரம்மா கூறியது? பண்டைக் காலத்தில் பல பெண்கள் போர்க்களம் புகுந்து அறப்போர் தொடுத்து அஞ்சாநெஞ்சுடன் போராடி ஆடவர்பலரை வீழ்த்தி அரும்பெரும் வெற்றிகள் பெற்றதாக எதிர்வீட்டுச் சிறுவன் நேற்றுக்கூட பாடம் படித்துக்கொண் டிருந்தானே, நீ கேட்டதில்லையா?"

"கேட்டேன்! களிப்பும் கொண்டேன்! ஆனால் அது, தெய்வங்கள் பலபல உலகிடை வந்து சென்ற அந்தக் காலத்தில் நடந்த நிகழ்ச்சி! ஆனால் இந்தக் காலத்தில் யாரடி அப்படித் துணிந்து போர்க்களம்புகுகிறார்கள்?"

"இல்லை! அதற்காகத்தான் நான் போகிறேன் என்று கூறுகிறேன்! நீயோ தடுக்கிறாய்! விடம்மா என்னை! நான்போய்த்தான் ஆகவேண்டும்!"

"போகிறேன் போகிறேன் என்கிறாயே போர்க்களம்! நான் கேட்கிறேன், ஏனடி ஜோன், உனக்குப் போர்புரிவது எப்படி என்று தெரியுமா?"

"தெரியாது!"

"திமிரிக்கொண்டு ஓடும்குதிரைகளை அடக்கிநிறுத்தி அவற்றின்மீது ஏறி அமர்ந்து சவாரி செய்ததுண்டா நீ?"

"கிடையாது!"

"கண்டவரை நடுங்கவைக்கும் கூர்மை படைத்த நீண்ட ஈட்டியைக் கையிலே ஒரு முறை ஏந்தியாவது பார்த்ததுண்டா நீ?"

"இல்லை"

"பகைவர்தம் மார்பை இரு கூறாகப் பிளந்தெறியும் வல்லமை படைத்த வாளை எப்படி மாற்றார் மீது வீசுவது என்பதை நீ அறிவாயா?"

"அறியேன்!"

"கோட்டைகளை முற்றுகையிடுவது என்றால் என்ன? அந்த முற்றுகைகளை முறித்துத் தள்

ளுவது எப்படி? பகைவர் படைகள் ஏராளமாகவும் நம் படைவீரர்கள் கொஞ்சமாகவும் இருந்தால் கையாளவேண்டிய போர்முறை எது? மாற்றார் சேனை சிறியதாகவும் நம்முடையபட்டாளம் பெரியதாகவும் இருந்தால் கடைப்பிடிக்க வேண்டிய போர்த்திட்டம் எப்படிப்பட்டது? இவையெல்லாம் தெரியுமா உனக்கு?"

"தெரியாது!"

"ஆனால் போர்மட்டும் புரியப் போகிறாய்! நிரம்ப நன்றாயிருக்கிறதடி நீ பேசுவது! யாராவது கேட்டால் கைகொட்டிச் சிரிப்பார்கள்! குதிரையேறத் தெரியாது—வாள்சுழற்றத் தெரியாது—ஈட்டி எறியத் தெரியாது—போர்க்களத் தந்திரங்கள் தெரியாது—படை அமைப்பு முறைகள் தெரியாது—போரே தெரியாது! ஆனால் போர் புரியப் போகிறாய்!போர்! போர் என்றால் என்ன சிறுபிள்ளை விளையாட்டா அது?"

"கேலி பேசுவது எளிது—யாரும்செய்துவிடலாம்அதனை—அதற்குப் பிரமாதமான பயிற்சி ஒன்றும்தேவையில்லை.—ஆனால் பிரான்ஸ் பாழாகிறது! பகைவர்கள் வெற்றிமேல் வெற்றி பெற்று வருகிறார்கள்! நம் படைவீரர்கள் செத்தோம் பிழைத்தோம் என்று தோற்றோடி வருகிறார்கள்! ஆங்கிலேயர்கள் வட்டாரத்திற்கு வட்டாரம் முன்னேறிக் கொண்டு வருகிறார்கள்! நம்முடைய கோட்டைகள் தினம் தினம் பறிபோனபடி இருக்கின்றன! இந்தக் கோரக் காட்சியைக் கண்ணால் பார்த்த பிறகும் நான் இங்கே வாளா கிடப்பதா? முடியாது! கூடாது! நான் போய்த்தான் ஆகவேண்டும் போர்க்களம்!"

"அடி அம்மா, எவ்வளவு வீரம் பிறந்து விட்டதடி இந்த ஆண் சிங்கத்திற்கு! பிரான்ஸ் தேசத்தையே யல்லவா பகைவரிடமிருந்து மீட்கப் போகிறாளாம் இந்த மாதரசி! இனி என்ன கவலை பிரான்சுக்கு? வாள் பிடித்தறியா வீராங்கனை வீரப்போர் புரியத் தொடங்கி விட்ட பிறகு வீரர் கூட்டத்திற்குத் தான் என்ன வேலையிருக்கிறது! அவர்களுக்கும் ஓய்வு அளிக்க வேண்டியதுதான்! உடனே வெற்றி விழாவுக்கும் ஏற்பாடு செய்ய வேண்டியதுதான்!"

"நீ எப்படிவேண்டுமானாலும் கேலிசெய்—ஆடுமாடு மேய்த்த பெண் அமர்க்களம் புகுகிறாள் என்றுவேண்டுமானாலும் கூறு.—எனக்குக் கவலையில்லை—நான் களம் புகுவது மட்டும் உறுதி! ஆம்! நிச்சயம்!"

"இதோ இப்படி என்னைப் பாரடி ஜோன்! நான் சொல்வதைக் கேள்! வீணாக ஏன் கெட்டுப் போகிறாய்? வீம்புபேசி ஏன் அழிந்து போகிறாய்? நேரே வீட்டிற்குப் போ! ஆடு

மாடுகளைக் கவனி! பயிர் பச்சைகளைப் பார்! தாய் தந்தையருக்குத் துணையாயிரு! காலாகாலத்தில் ஒரு கல்யாணத்தையும் செய்து கொண்டு நலமாக வாழு! ஒரு பாவமும் அறியாத உத்தமியாகிய உனக்கேனடி ஊர் வம்பெல்லாம்? போர் புரிந்தறியாத நீ போய்த்தானு பிரான்ஸ் காப்பாற்றப் படவேண்டும்? இல்லை, நான் கேட்கிறேன், நீ போனுல்தான், படைத் தலைவர்கள் உன்னைச் சேர்த்துக் கொள்வார்களா? என்னவோ எனக்குத் தெரிந்ததை நான் சொல்கிறேன்—பிறகு உன் விருப்பம்! பெண்ணுக்கு அழகு இல்லத்துத் திருவிளக்காக இருத்தல்—போர்க்களம் புகுதல் அல்ல!''

ஜோனின் நிலைமை மிகவும் சங்கடமானதாகிவிட்டது. அவளுடைய உள்ளம் இரு கூருகப் பிரிந்து, ஒருகூறு, "ஜோன்! நீ வீரமங்கை அல்லவா! அஞ்சா நெஞ்சமும் ஆற்றல் உருவமும் படைத்தவள் அல்லவா! போர்க்களம் புகத்தான் வேண்டும் நீ!'' என்று கூறிற்று. ஆனுல் அதே நேரத்தில் மற்றொரு கூறு, அவளைப் பார்த்து, "என்னடி பெண்ணே! போர் புரிவேன்—படைக்கலம் ஏந்துவேன்—பகைவரை வீழ்த்துவேன்—பிரான்ஸ்நாட்டை மீட்பேன் என்றெல்லாம் பேசுகிருய்! ஒரு பெண்மணிக்கு ஏற்ற செயல்களாடி இவை?'' என்று உரத்த குரலில் ஓங்கி முழங்கிற்று. அவளுடைய உள்ளத்திலே ஒரு புறததில் வீற்றிருந்த வீரமங்கை, பகைவர்வீசும் அம்புகளால் தாக்குண்டு பிரான்ஸ் அழிந்து கொண்டிருக்கும் நேரத்தில் ஆற்றோரத்தில் அமைதியாக இருந்து ஆடுமாடு மேய்த்து வாழ்வது அறமன்று என்று அறிவுரை புகன்றுள். ஆனுல் அதே உள்ளத்தில் மற்றோர் புறம் வீற்றிருந்த வீட்டுமங்கை, "ஆயிரமாயிரம் ஆண்கள் அஞ்சா நெஞ்சுடன் கூடி ஆயுத மேந்திப் போரிட்டும் அடித்து விரட்ட முடியாத பகைவர் கூட்டத்தை, அடி பைத்தியமே, உன்னுலேயாடி விரட்ட முடியும்—சீச்சீ! என்ன இருந்தாலுமே உனக்கு இந்தப் புத்தி ஆகுமோ?'' என்று கேலிச் சிந்து பாடலானுள். அஞ்சாத உள்ளம்—அயராத உழைப்பு—தியாகசிந்தனையின் மேன்மை—திடசித்தத்துடன் போராடினுல் நாட்டுக்குக் கிடைக்கக் கூடிய நன்மை இவற்றின் சிறப்புகளை நிரல் நிரலே விளக்கிக் காட்டி களம் புக வேண்டிய கடமையை வலியுறுத்தி வாதாடினுள் வீரமங்கை. இல்லறத்தின் இன்பம்—வீட்டு வாழ்வின் சிறப்பு—போர்க்களத்தின் பயங்கரம்—படைப் பயிற்சி இல்லாத் தன்மை—பெற்றோரைக் காக்க வேண்டிய பொறுப்பு—பெண்

டிர் குலத்திற்குப் போர்க்கள வாழ்வு தகாது என்னும் பரம்பரை எண்ணம் இவற்றையெல்லாம் அடுக்கடுக்காக எடுத்துக் காட்டி, "கூடாது—ஜோன்—போர்க்களம் புகக்கூடாது—ஊர் சிரிக்கும்—நாடு கேலிக் குரல் எழுப்பும்" என்று எதிர் வாதம் எழுப்பினாள் வீட்டு மங்கை.

வீரமங்கை ஜோனுக்கும் வீட்டுமங்கை ஜோனுக்கு இடையே ஓயாத போராட்டம் நடந்தது—ஒருநாள் இருநாள் அல்ல—ஏறத்தாழ மூன்று ஆண்டுகள் மனப்போர் தொடர்ந்து நடந்தது. இறுதியில் வீரமங்கைதான் வென்றாள். வீட்டுமங்கை தோற்றாள். ஜோன், புன்முறுவல் பூத்த முகத்துடனே போர்க்களம் நோக்கிப் புறப்பட்டுவிட்டாள்.

தந்தை ஒரு போர்வீரர்—அண்ணன் களத்திலே காளையெனத் திகழ்பவன்—தாத்தாவும் படைவீரராக இருந்தவர்தான்—உற்றார் உறவினரிலே பலர் சிப்பாய்களாக இருப்பவர்கள்—எனவேதான் இளம் பெண் ஜோனுக்குப் போர்க்களக் காதல் பிறந்தது என்று யாரும் கூறிவிட முடியாது. ஏனெனில் அவளுடைய குடும்பத்திலே யாரும் போரிலே ஈடுபட்டிருந்தது கிடையாது. போர் என்றாலே சற்று ஒதுங்கியிருக்கும் இயற்கை படைத்த உழவர் குலத்திலே உதித்தவள்தான் ஜோன். என்றாலும் அவளுடைய உள்ளத்திலே வேரூன்றிப் போயிருந்த நாட்டுப்பற்று, அவளை, அறப்போர் புரியும் ஆற்றலும் துணிவும் அஞ்சா நெஞ்சமும் படைத்த ஆரணங்காக மாற்றி அமைத்தது.

ஜோன், 1412-ம் ஆண்டு, பிரான்ஸ் நாட்டில், மியூஸ் என்னும் ஆற்றோரத்தில் உள்ள டாம்ரிமி என்னும் சிற்றூரில், உழவர் குலத்தோன்றல் ஒருவரின் மகளாகப் பிறந்தவள். அவள் பிறந்தகாலம், பிரான்ஸ், போர்ப் புயலிற் சிக்கிச் சிதையும் சிங்காரப் படகாக இருந்த காலம்; அப்போது பிரஞ்சு நாட்டின்மீது படையெடுத்துப் போர் புரிந்து பெருத்த ஆர்ப்பாட்டம்புரிந்து வந்த ஆங்கிலேயர்கள் வெற்றிமேல் வெற்றி பெற்று வீர உலா வந்துகொண்டிருந்த காலம்; பிரஞ்சுப்படைகள் சோர்வும் சோகமும் உற்று, தீரமும் தைரியமும் அற்று, திக்கெட்டிலும் தோல்விக் கீதமே பாடிக்கொண்டிருந்த காலம்; பிரஞ்சுக் குடிகள் எல்லாம் அச்சமும் அவலமும் அடைந்து, அமைதியும் ஆநந்தமும் இழந்து, ஏன் பிறந்தோம் இந் நாட்டில் என்று சொல்லிச் சொல்லிப் புலம்பிக் கொண்டிருந்த காலம்!

கிராமத்திலே, உழவர்கள் அரும்பாடுபட்டு உருவாக்கிய கதிர்களை அறுத்துக் குவித்துக்

கொண்டிருப்பார்கள் மிக மகிழ்ச்சியுடன்!—திடீரென்று எங்கிருந்தோ ஓர் ஆங்கிலேயப் படை வரும்—பயிர் முழுதும் நாசமாகும்—ஆடு மாடுகள் கொள்ளை போகும்—வீடுகள் தீப்பற்றி எரியும்—குடிசைகள் பிடிசாம்பலாகும்—பெண்டு பிள்ளைகள் பரிதாபச் சித்திரங்களாக, துக்கபுரியின் தூதுவர்களாகத் தெருவில் திகைத்து நிற்பர்.

இளமையும் எழிலும் ததும்பும் பெண்கள், ஊருக்கு ஓரத்தே உள்ள 'ஓக்' மரத் தோப்புகளிலே தங்கள் கால்நடைச் செல்வங்களை மேய்த்து வர அழைத்துச் செல்வர் மிக உல்லாசமாக! ஆடுகள் ஓர் புறமும் மாடுகள் மற்றோர் புறமும் புல் தரைகளைச் சற்றே பதம் பார்த்தபடி இருக்கும்! பெண்கள், ஆயிரம் கதைகளைப் பேசியபடி இருப்பர்! சடாரென்று, தோப்பிலே,ஏதேனும்ஒருபுதரருகேயிருந்து பகைவீரர்கள் புற்றீசல் எனப் புறப்படுவர். பெண்கள் மருண்டோடும் மான்களாவர்! அந்த அழகு மான்களைத் துரத்தி அடிக்கும் புலிகளாவர் தீய நினைப்புப் படைத்த படைவீரர்கள்! பல சமயம், மான்களிலே பல, புலிகளின் கோரப் பசிக்கு இரையாகிவிடும்! ஊர் கோவெனக் கதறி அழும்!

சிரித்துக் களித்தபடி, சிறு கதை பல புகன்றபடி, செங்கரும்புகள் நடப்பதுபோல்சிறுவர் பலர் சென்றிடுவர் பள்ளிக்கூடம். கையிலே புத்தகம் இருக்கும்! காலிலேசிறுசெருப்பிருக்கும்! முகத்திலே இளமை எழில் இருக்கும்! கண்களிலே தூய ஒளி இருக்கும்! வஞ்சகம் அவர்கள் உள்ளத்தை அண்ட மறுக்கும்! சூழ்ச்சி அவர்கள் பக்கமும் வர அஞ்சும்! இவ் வண்ணமாக அந்த 'முல்லை மொக்குகள்' 'இளம்பிஞ்சு இதயங்கள்' இன்ப நடை நடந்தபடி இருக்கும்! ஆனால் என்ன அக்கிரமம்! திடீரென்று கோபாவேசம் கொண்ட குதிரைக்கூட்டமொன்று அந்தச் சிறு மலர்களைக் காலால் மிதித்துத் துவைத்தபடி ஓடும்! மலர்களிலே பல மாஜி மலர்களாகிவிடும்—குழந்தைகள் பிணக்குவியலாகி விடுவர். அதுபற்றிய கவலை அணுவளவுமின்றிப் பகைவர்கள் புன்சிரிப்புடன், வெற்றிக் களிப்புடன், பரிகள் மீது உல்லாச சவாரி புரிந்திடுவர்!

இப்படித்தான் இருந்தது பிரான்ஸ், ஜோன் பிறந்தகாலத்தில்! அவலம், அழுகுரல், அச்சம், வேதனை, விம்மல் ஒலி, வீரர்கள்கோட்டத்திலேகுந்தி அழும் கோரம் இவற்றைத்தான் பார்க்க முடிந்ததுபிரான்சிலே! வெற்றி, வீரம்,தைரியம், திடசித்தம், அஞ்சாநெஞ்சம், இன்ப வாழ்வு, ஆநந்த கீதம்—இவற்றைக் காண முடியவில்லை!

தோல்வி! தோல்வி! தோல்வி! இந்த ஒரு சொல் தான் எந்தப் பக்கம் திரும்பினாலும் ஒலித்துக் கொண்டிருந்தது பிரான்சில்! வெற்றி— இந்த மூன்றெழுத்துச் சொல்லைக் காதால் கேட்பதும் அரிதாகிவிட்டது!

சினான் என்னும் இடத்திலே ஒரு கோட்டை இருந்தது— ஆனால் அதன் வரலாற்றை அறிந்தவர்கள் தான் இதனை ஒரு கோட்டை என்று கவுரவமான முறையில் அழைத்திட மனம் துணிவர். ஏனையோர் அதனை ஓர் இடிந்த மண்டபம் என்று தான் கூறுவர்—உண்மையிலேயே அது அப்படித் தான் இருந்தது! அந்த மண்டபத்திற்குள்ளே ஆயிரம் கந்தல்களான அழுக்குச் சட்டைகளை அணிந்துகொண்டு பலர் அங்கு மிங்கும் உலவிக்கொண்டிருந்தனர். மந்திரி பிரதானிகள் என்று பெயராம் அவர்களுக்கு! அவர்களைப் பார்த்தால் யாரும் பிரதானிகள், என்று கூறமாட்டார்கள், பிச்சைக்காரர்கள் என்றுதான் கூறுவர். சாயம் வெளுத்துப் போன உடையை அலங்கோலமாக அணிந்துகொண்டு ஓர் அம்மையார் அவர்களுக்கிடையே காணப்பட்டார் — சிலர் அந்த அம்மையாரை மேன்மை தங்கிய அரசியாரே என்று அழைத்துக்கொண்டிருந்தார்கள் பழைய பழக்கத்தின் காரணமாக! ஆனால் பலர் அந்தப் பழக்கத்தை நெடுநாட்களுக்கு முன்னரே கைவிட்டுவிட்டனர். அதுதான் நியாயமும் கூட! அந்த அம்மையாரை இராணி என்றழைப்பது இராணி என்ற சொல்லையே கேலிசெய்யும் காரியமேயாகும். —அவ்வளவு பரிதாபகரமாக இருந்தது அம்மையாரின் நிலை. அந்த அம்மையாரின் கூடவே ஒருவன் உலவிக்கொண்டிருந்தான் தேய்ந்துபோன ஓவியம் தள்ளாடித் தள்ளாடி நடப்பதைப்போல! அவன் நடந்து போகிறபோது ஒருவன் இளவரசரே என்றழைக்கிறான். அதைக் கேட்டுக்கொண்டிருக்கும் மற்றொருவன் தன் அருகே இருப்பவனைப் பார்த்துக் கண் சிமிட்டுகிறான் அவசர அவசரமாக! இந்தச் சுண்டெலிக்குப் பெயரா சிங்க ஏறு என்று பொருள் அந்தக் கண் அசைப்புக்கு! ஒருவன் தன் எதிரே இருப்பவனைப் பார்த்துக் கேட்கிறான் நம் இளவரசருக்கு முடிசூட்டுவிழா எப்போது நடைபெறும் என்று! "போடா போ பைத்தியமே! நாடு எங்கே இருக்கிறது இவர் முடிசூடி ஆள! இடிந்து நொறுங்கிக் கீழே விழத் தருணம் நோக்கிக் கொண்டிருக்கும் இந்த வீடு தானேடா இருக்கிறது! இதற்கு முடிசூட்டுவிழா ஒரு கேடா?" என்று பேசவில்லை மற்றவன்! ஆனால் அவன் பார்த்தபார்வை! அந்தப் பார்வைக்கு மட்டும்

பேச வாயிருந்தால் அதைத் தான் பேசும்!

மன்னனும் மந்திரி பிரதானிகளும் இராணியாரும் ஏனைய படைத்தலைவர்களும் அவர்கள் அனைவரும்வாழும் அரண்மனையும் இருந்த கோலம இது என்றால், நாடும், நாட்டிலே உலவிய மக்களும், அந்த மக்கள் வாழ்ந்த வாழ்வும், அந்த வாழ்விலே ததும்பிய இன்பமும்எப்படி இருந்திருக்கும்?—எவரும் அதனைக் கணக்குப் போட்டுப் பார்த்துக்கொள்ள முடியுமே! சொற்கள் எனும் தூதுவர்களா தேவை அதனை விவரித்துக்கூற!

பிரஞ்சு நாட்டின் வரலாற்றிலேயே இல்லாத புதுமை அந்த நாட்டு மன்னன் ஒருவன் இவ்வளவு இழிநிலை உற்று, எல்லாராலும்வெறுக்கப்பட்டு, கேலிக்குரிய கருப்பொருளாக உலவிடும் நிகழ்ச்சி! எந்தக் காலத்திலேயும்பிரான்ஸ், பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கம் என்ற அந்தக் காலத்திலே இருந்ததைப் போல அவ்வளவு பரிதாபகரமான நிலையில் இருந்தது கிடையாது!

ஏறத்தாழ பிரான்ஸ் முழுவதுமே ஆங்கிலேயர்களுக்குமாறிவிட்டது! பாரிஸ்—பிரான்சின் தலைநகரம், நாட்டின் இருதயபீடம்,—அதுவும்அவர்களிடம் சென்றுவிட்டது! அது மட்டுமா? ஆங்கில மன்னன் பிரஞ்சுச்சக்கரவர்த்தியாக முடிசூட்டப்பட்டு வெற்றிவிழாவும் கொண்டாடப்பட்டுவிட்டது.

பிரஞ்சு இளவரசன் சார்லசிடம் எஞ்சியிருந்த நிலப்பகுதி மிக மிகச் சொஞ்சம்! அதுவுங்கூட வெஞ்சமர் புரிந்துவந்த அஞ்சாநெஞ்சுடைய ஆங்கிலேயரிடம் தஞ்சம் புகும் வேளை இப்பவோ பின்னையோ இன்னும் சற்றுநேரத்திலோ என்றுதான் இருந்தது. தீர்ந்துவிட்டது பிரான்ஸ்—வென்றுவிட்டது இங்கிலாந்து — சார்லஸ் தலை இனி தப்பாது—பிரான்சிலே பகைவர் ஆட்சிதான் இனி நடக்கும் என்றே அனைவரும் முடிவுகட்டிவிட்டனர். இனி மேலுங்கூட பகைவரை வீழ்த்த முடியும்—இனியுங்கூட பிரான்ஸ் தலை நிமிர முடியும்—வெற்றியை நம் பக்கம் திருப்ப முடியும்—விடுதலை வாழ்வை மீண்டும் பெறமுடியும் என்ற எண்ணம் யாருக்குமே ஏற்படவில்லை. எல்லோரும், இன்னும் எத்தனை நாள் ஆகும் ஆங்கிலேயரின் வெற்றி முழுமை எய்த என்னும் நாட்கணக்கைத் தான் போடத் தொடங்கினர்.

தீர்ந்தது--தீர்ந்தது--படகு கவிழத் தொடங்கிவிட்டது—இன்னமும் ஒரு விநாடிதான் என்று பிரஞ்சுக்காரர்கள் யாவரும் அடிமூச்சுக் குரலாலே அவலமொழி பேசலாயினர். பேசலாயினர் என்று சொல்லி அரைகுறையாக நிறுத்துவது

னேன்? உண்மையும் அப்படித்தான் இருந்தது. அந்த நேரத்திலேதான் யாரும் எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று நிகழ்ந்தது—படகு காப்பாற்றப்பட்டது—புயல் நிறுத்தப்பட்டது—பிரான்ஸ், அது இழந்த இன்பத்தை, விடுதலை வாழ்வை மீண்டும் பெறலாயிற்று. கவிழ்ந்த தாமரை நிமிர்ந்த ஓவியமாயிற்று.

ஆடுமாடு மேய்த்துக்கொண்டு, ஆனந்தமாகப் பாடிக்கொண்டு, ஆற்றோரத்தில் வாழ்ந்துகொண்டிருந்த ஓர் இளம்பெண்—சரியாகப் பதினாறு வயதுகூட நிரம்பாத ஓர் பாவை—எழுதப்படிக்கக்கூடத் தெரியாத ஒரு சிறுமி—ஜோன், திடீரென்று புறப்பட்டு, திடுக்கிட வைக்கும் போர்க்களம் புகுந்து, திடநெஞ்சுடன் போராடி, தீரமிழந்து தேம்பிக் கிடந்த பிரான்சுக்குப் புதியதோர் தைரியத்தையும் உற்சாகத்தையும் உணர்ச்சி வேகத்தையும் அளித்து, முதுகெலும்பற்ற கோழைகளாய் முடங்கிக் கிடந்த படை வீரர்களை அஞ்சாமையின் சின்னங்களாய், ஆற்றலின் திரு உருவங்களாய், சீறிப் பாயும் சிங்க ஏறுகளாய் மாற்றி அமைத்து, வெற்றி புரியை பிரான்சின் தலைவாயிலுக்கருகே அழைத்து வந்து நிறுத்திய அதி அற்புதமான செய்கைதான் அந்த எதிர்பாராத நிகழ்ச்சி!

ஜோன் சிறு குழந்தையாய் இருந்தபோதிலிருந்தே பகைவர் கூட்டத்தால் தன் நாடு படும் துன்பத்தை நன்கு அறிந்திருந்தாள். அவளும் அவள் பெற்றோர்களும் இருந்த ஊராகிய டாம்ரிமி பலமுறை மாற்றார் இனத்தைச் சேர்ந்த கள்வர் கூட்டத்தால் தாக்கப்பட்டு சூறையாடப்பட்டிருக்கிறது — அப்போதெல்லாம் அவள் மிகவும் வருந்தியிருக்கிறாள். இரண்டு மூன்று முறை, அந்த ஊர் மக்கள், பகைவர்கள் ஆற்றும் கொடுமையைப் பொறுக்க முடியாமல், அந்த ஊரைவிட்டே வெளியேறி, அந்த ஊருக்கு ஆறு கல் தொலைவிலிருக்கும் நியூஷாட்டல் என்னும் கிராமத்தில் குடிபுகுந்திருக்கின்றனர்—அந்த நேரங்களில், ஜோன், தன் நாட்டு மக்களின் பரிதாப நிலையை எண்ணி எண்ணிக் கண்ணீர் சிந்தியிருக்கிறாள். எத்தனையோ முறை, ஜோன், டாம்ரிமியின் பக்கத்தே போகும் நெடுஞ் சாலையில் நின்றுகொண்டு, பிரான்ஸ் அடையும் அல்லல்களைக் குறித்து, அந்த வழியே செல்லும் மக்கள் பலவாறு பேசி வருந்திச் செல்வதைக் கேட்டும் கண்டும் இருக்கிறாள் — அந்தக் கேள்வியும் காட்சியும் அவள் உள்ளத்தில் ஆங்கிலேயர் மீது அளவற்ற வெறுப்பையும் தன் நாட்டின் துன்பத்தைப் போக்கத் தன்னால் ஆனதைச் செய்தாக வேண்டும்

என்னும் உறுதியையும் உண்டு பண்ணலாயின.

வயது அவளுக்குப் பதின் மூன்று இருக்கும். அப்போது, ஒரு நாள், அவள், தன் ஊரை விட்டு அகன்று, போர்க்களம் புகுந்து, அஞ்சா நெஞ்சுடன் போராடி ஆங்கிலேயரை விரட்டுவதே தனக்குரிய கடமை என்றும், அந்தக் கடமை நிறைவேற்றப்படும் வரை தான் திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்றும், தனக்குத் தானே உறுதியுரை புகன்று கொண்டாள்.

ஆனால், அதே நேரத்தில், போர்ப்பயிற்சியற்ற சிறு பெண்ணாகிய தான், ஈட்டியும் வாளுமேந்திக் களத்தில் புகுந்து கடும் போர் புரிவது சரியா, அல்லது வீட்டிலே தங்கி, ஆடுமாடு மேய்த்து, அன்புள்ள பெற்றோருக்கு அருந்துணையாக இருப்பது சரியா என்னும் கேள்வி அவள் மனதை அப்படியும் இப்படியும் ஆட்டிப் படைக்கலாயிற்று. போர்க்களம் புகுவதானால் பெற்றோர்க்குத் துணைபுரிய முடியாது-பெற்றோர்க்குத் துணை புரிவதானால் போர்க்களம் புக முடியாது - இரண்டு நிலைகளிலே எந்த நிலை சிறந்தது— இதனை அவளால் எளிதிலே முடிவுகட்டமுடியவில்லை. பெற்றோர்— அவளுடைய உயிருக்குயிரானவர்கள்! பிரான்ஸ்— —அது அவளுடைய கண்ணின் கருமணி! இரண்டிலே எதையும் இழக்க முடியாது. ஆனால் எதையாவது ஒன்றை இழந்ததாக வேண்டிய நிலை பிறந்துவிட்டது—எதை இழப்பது — யாரைத்துறப்பது-எவரைக் கைவிடுவது-தன்னைப் பெற்று வளர்த்த தாய் தந்தையரையா, அன்றி தன்னைப் போற்றி வளர்க்கும் உயர்திரு நாட்டினையா— பிரச்சினை மிகவும் கடுமையானதாக இருந்தது—அவள் மனம், இருதலைக்கொள்ளி எறும்பாயிற்று. இறுதியில், அவள், நாம் முன்னரே குறிப்பிட்டதைப் போல நாட்டிற்காகப் போராடுவதே தனிசிறந்த செயல் என்னும் முடிவுக்கு வந்தாள். அப்போது அவளுக்கு வயது பதினாறு.

போர்க்களம் புகப் போகிறாள் தாம் பெற்றுவளர்த்த அருமை மகள் என்பது கேட்டதும் பெற்றோர் சீறினர். உற்றார்—உறவினர் பதைத்தனர்-ஊர் மக்களோ கை கொட்டிச் சிரித்தனர். கேலியும் கிண்டலும் நாலாபக்கமுமிருந்து எழுந்தன. ஆனால், ஜோன், சீற்றம்—சுடுசொல்—கேலி—கிண்டல் எதைக் கண்டும் மனம் சளைக்கவில்லை. களம் புகுந்தே தீர்வது என்னும் தன்முடிவையும் மறக்கவில்லை, வாகுலியர் என்னும் ஊருக்குச் சென்று, அங்கே குடியிருந்த தன் தமக்கையின் கணவனை

உடன் அழைத்துக்கொண்டு, அதே ஊரில் தங்கியிருந்த ராபர்ட் என்னும் படைத் தலைவனைக் கண்டு தன் மனக்கருத்தை எடுத்து மொழிந்தாள், கேட்டதும் கடுங்கோபம் கொண்டான் ராபர்ட். கன்னத்தில் இரண்டு அறை கொடுத்தான் ஜோனுக்கு! என்னடி பெண்ணே—பைத்தியமா உனக்கு—போருக்குப் போக—உத்தமியாக வாழு என்று கூறி கேலியுடன் கலந்த அறிவுரையை அவளுக்கு அளித்தான்.

என்றாலும், ஜோன் மனம் தளரவில்லை. மறு ஆண்டு மீண்டும், அதே ராபர்ட்டைப் பேட்டி கண்டு, தன் வேண்டுகோளை மற்றுமோர் முறை தெரிவித்துக் கொள்ளலானாள். இம்முறை ராபர்ட் என்ன காரணத்தாலோ அவளுடைய வேண்டுகோளை ஒப்புக்கொண்டான். இந்தப் பெண், படையிலே சேர்ந்து போராட விரும்புகிறாள் என்னும் செய்தியை சார்லஸ் இளவரசனுக்கு அவனே அறிவித்ததோடு, அவளை, ஆறு துணைவர்களுடன், இளவரசன் சார்லஸிடம் அனுப்பிவைத்தான்.

சார்லஸ்—நாம் முன்னரே தெரிவித்திருக்கிறோம் — நடமாடும் பிணமாக நலிவுற்று இருந்தான். நாட்டை இழந்து, ஆட்சிப் பீடத்தை இழந்து, பாரிஸ் நகரத்தை இழந்து, அங்குள்ள தன் அழகிய அரண்மனையையும் இழந்து, சினோன் என்னும் இடத்திலே, இடிந்து கிடக்கும் ஓர் மண்டபத்திலே, உடைந்த உள்ளத்தவனாக, நீர் சிந்தும் கண்ணினனாக, வாடிவதங்கிய முகத்தினனாக உலவிக்கொண்டிருந்தான். எனவே ஜோன், அவனிடம் சென்று, எனக்கு அனுமதி மட்டும் கொடுங்கள் போதும்—போர்க்களம் செல்கிறேன், பிரான்ஸ் நாட்டை மீட்கிறேன், இழந்த விடுதலையை உனக்குப் பெற்றுத்தருகிறேன் என்று புகன்றபோது, அவன், எளிதிலே அவளுக்கு அனுமதி அளித்ததிலே வியப்பேதுமில்லை. அலைகடலிலே சிக்கியவன் சிறு துரும்பாவது கிடைத்தால் போதும் கரையேறி விடலாம் என்றெண்ணுவானே, அந்த நிலையிலேதான் இருந்தான் சார்லஸ். ஆகவே ஜோன் விரும்பியவாறே அவளுக்கு ஒரு கூரிய வாளும், ஆற்றல் மிக்க ஒரு குதிரையும் அணிந்து கொள்ள இரும்புக் கவசமும் அளித்ததோடு, அவளுடையதலைமையின்கீழ்ப் போராட 4000 போர் வீரர்களையும் மகிழ்ச்சியுடன் அனுப்பி வைத்தான்.

வெண்மை ததும்பும் இரும்புக் கவசம் அணிந்து, கூர்மை ததும்பும் ஓர் வாளைக் கையிலே ஏந்தி, துள்ளிப் பாய்ந்து ஓடும் தீரக்குதிரை ஒன்றன்மீதேறி படைவரிசைகளை ஒழுங்குபெற

அமைத்து அழைத்துக் கொண்டு, அந்தக் காலத்தில் ஆங்கிலேயரால் முற்றுகையிடப்பட்டிருந்த ஆர்லியன்ஸ் கோட்டையை நோக்கிக் கடும் வேகமாகச் செல்லலானாள் பதினேழு வயதே நிரம்பியிருந்த ஜோன்.

சோர்ந்துகிடக்கும் பிரான்ஸைத் தட்டி எழுப்பி உற்சாக மூட்ட, சோகமுற்றுக் கிடக்கும் படைகளை ஒழுங்குபடுத்தி உணர்ச்சியுடன் போராடச் செய்ய, பிரஞ்சு மக்களுக்குப் புதுவாழ்வை பூரிப்பை புன்னகையை புது இன்பத்தை அளிக்க, ஒரு வீரப் பெண், வாளேந்திய கரத்தினளாய் அஞ்சாநெஞ்சம் அமைந்தவளாய், ஆங்கிலேயப் படைகளை அஞ்சி நடுங்கச் செய்யும் ஆற்றலும் அறிவுத் திறமையும் ஆண்மையும் படைத்தவளாய், புறப்பட்டுச் சென்றிருக்கிறாள்—ஆர்லியன்ஸ்கோட்டையை நோக்கி என்னும் செய்தி விரைவில் பிரான்ஸ் எங்கணும் காட்டுத் தீயெனப் பரவலாயிற்று. போர்வீரர்களிடையே ஒருபுது எழுச்சியும், பொது மக்களிடையே ஒரு புது மகிழ்ச்சியும், அரச குடும்பத்தினிடையே ஆநந்த கீதமும் கிளர்ந்தெழலாயிற்று. புனல் சொரிந்து கிடந்த கண்களிலிருந்து வீரக்கனல் தெறிக்கும் காட்சியும், சோர்ந்து வளைந்துகிடந்த முதுகெலும்புகள் திடீரென நிமிர்ந்து நிற்கும் புதுமையும் என் செய்வோம் இனி என்று ஏங்கிக் கிடந்த இதயங்கள் போர் — போர் அறப்போர் என்று முரசு கொட்டும் நிகழ்ச்சியும் நாடெங்கும் நிகழலாயின. துக்க புரியாக இருந்த பிரான்ஸ், வீராங்கனை ஜோனின் வருகையைக் கண்டதும் அஞ்சாமையின் அடையாளச் சின்னமாக மாறிற்று.

கல்வியறிவு வாய்க்கப் பெறாத கிராமியப் பெண்ணாக இருந்தும், ஜோன், கூர்த்த மதியும் திட்டமிட்டுப் பணியாற்றும் திறமும் படைத்தவளாக இருந்தமையின், களம் அமைப்பதிலேயும் போர் தொடுப்பதிலேயும் முறைகள் வகுப்பதிலேயும் படைகளை நடத்துவதிலேயும் இணையற்ற வல்லமை கொண்டவளாக விளங்கினாள். பரம்பரை பரம்பரையாக போர்வீரர்களாக இருந்த மறவர் குடியிலே பிறந்த சேனைத் தலைவர்களால் கூட வகுக்க முடியாத பல அரிய திட்டங்கள் வீரமங்கை ஜோனால் வகுக்கப்பட்டன. ஆர்லியன்ஸ் கோட்டையருகே வந்ததும், ஜோன் படைவீரர்களிடையே காணப்பட்ட பல்வேறு ஒழுங்கீனங்களைக் களைந்தெறிந்தாள். காம வெறியர்களாய் இருந்த கசடர்களை உடனடியாகச் சேனையை விட்டு விலக்கினாள். தங்கள் காம விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகவே அவர்களால் அழைத்துச் செல்லப்பட்ட இளம் பெண்கள் அனை

வருக்கும் விடுதலை அளித்து அவர்களை அவர்கள்தம் சொந்த ஊர்கட்குப் போகுமாறு அனுப்பி வைத்தாள். யார் யார் ஐந்தாம் படைக்காரர்களாக இருக்கிறார்கள், யார் யார் போரிட விருப்பமற்ற கோழைகளாக இருக்கிறார்கள், யார் யார் உண்டு கொழுப்பதற்காகவே போரிற் சேர்ந்து புறமுதுகிட்டு ஓடும் புல்லர்களாக இருக்கிறார்கள் என்பதையெல்லாம் நுண்மையாகக் கண்டறிந்து அச்சம் தயை தாட்சண்ணியமின்றி அவர்களை படைவீரர்குழுவிலிருந்து விரட்டி அடித்தாள். பிறகு முற்றுகையிடப்பட்டிருந்த ஆர்லியன்ஸ் கோட்டையை மீட்பதற்காகப் புதிய போர் தொடுத்தாள்.

போர் என்றால் படைவீரர்களுக்குத் தாக்கீதை மட்டும் அனுப்பி விட்டு, தாங்கள், உல்லாசமாகத் தொலை தூரத்தில் இருக்கும் கூடாரத்தில் அமர்ந்து காமக் களியாட்டில் அயர்ந்திருப்பது என்னும் பிற சேனாதிபதிகளின் உளுத்துப் போன முறையைப் பின்பற்றினாளில்லை ஜோன். நேரே போர்க்களத்திற்கு வந்தாள். படைவரிசையின் முன்னணியில் முதல் இடத்தில் நின்றாள். பிற வீரர்களைப் போலவே தானும் பகைவர் மீது கூரிய அம்புகளை மழைபோல் தொடுத்தும், ஈட்டிகளை எறிந்தும், வாள் சுழற்றிப்பணி புரிந்தும் நேரிடையாகப் போர் செய்து வீரர்கட்கு உற்சாகமூட்டினாள். ஒரு முறை பகைவர்கள் வீசிய அம்பொன்று அவளுடைய அழகிய உடல் மீது பாய்ந்து குருதி வெள்ளத்தைக் கொட்டச்செய்தது என்றாலும் அச்சம் அவளை நெருங்க நடுங்கிற்று. கோழைத்தனம் அவளை எட்டிபார்க்கவும் பயந்து ஒதுங்கிற்று. வீரமும் தீரமுமே அவளுடைய இணைபிரியாத் தோழர்களாயினர். போர் தொடர்ந்து நடந்தது. வெற்றி ஜோன் இருக்கும் திக்கு நோக்கித் திரும்பி அவளைத் தேடிக் கொண்டு வந்தது. ஆர்லியன்ஸ் பிரஞ்சுக்காரர்களிடம் சேர்ந்தது. ஆங்கிலப் படைகள் சின்னாபின்னமடைந்து சிதறி ஓடலாயின.

யாங்கோ, மியூன், போசின்சி, பார்த்தே, முதலிய பல இடங்களில் நிகழ்ந்த போரிலும் ஜோன், பிரஞ்சு நாட்டிற்கே வெற்றியைத் தேடித்தந்து, ஆங்கிலேயப் படைகளை அஞ்சி ஓடச் செய்தாள்.

இவ்வண்ணம், எத்தனையோ ஆண்டுகளாகத் தோல்விபுரியிலேயே உலவிக் கொண்டிருந்த பிரான்சை, ஜோன் இரண்டே கிழமைகளில் வெற்றி மாளிகைக்குள் அழைத்து வந்து புகழ் எனும் இருக்கையில் அமரவைத்தாள். உடனே கவலைக் கடலில் சிக்கி, தோல்வி

மாதை மணந்து, துயரகீதம் பாடிக்கொண்டிருந்த இளவரசன் சார்லசை ரீமஸ் என்னும் இடத்திற்கு ராஜமரியாதைகளுடனும் பெருத்த ஆரவாரத்துடனும் அழைத்துச் சென்று முறைப்படி முடிசூட்டு விழாவையும் நடத்தி வைத்தாள். விழா நிகழ்ந்த போது வீராங்கனை ஜோனின் புகழ் இங்கிலாந்து, பிரான்ஸ், இரண்டு நாடுகளிலும் காற்றில் எல்லாம் கலந்து வரும் கீதமாக இருந்தது. திக்கெட்டிலும் அவளுடைய வீரப்பெயரே திருப்பித் திருப்பி ஒலிக்கப்பட்டது. மக்கள் எல்லாம் தங்கள் துயரத்தைத் துடைத்தெறிந்த அம்மாதரசியை மனமார வாழ்த்தி வாயாரப் பாராட்டலாயினர்.

முடி சூட்டுவிழா முடிந்ததும், நேரே பாரிஸ்மீது படையெடுத்துச் சென்று, அந்த நகரத்தையும் மீட்டு, அங்கிருக்கும் ஆங்கிலப் படைகளையும் தோற்றோடச் செய்து, பிரான்ஸ் முழுமையையும் கைப்பற்றியாக வேண்டும் என்று வற்புறுத்தினாள் ஜோன் ஆனால் முதுகெலும்பற்ற முழுச் சோம்பேறியான சார்லஸ் அதற்கு இணங்கினனில்லை. கிடைத்த ஜில்லாக்கள் போதும்— இனியும் எதற்குப் போர் என்று எண்ணினான் அந்த எழிலரசன்! போர் போதும் ஜோன்—உனக்கு என்ன பரிசுகள் வேண்டும், கேள் தருகிறேன் —அமைதியாக இங்கே தங்கி இரு என்

"ஆரம்பக் கல்வி" ஆபீஸ்

94-95, புதுத் தெரு, மண்ணடி, சென்னை, 1.

மாதாந்திர கணக்கு அனுப்பும் பாரங்கள்	(ஆங்கிலம்) 100	ரூ	2-8
ரிகார்ட் ஷீட்டுகள்	(ஆங்கிலம்) 100	ரூ.	2-0
பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள்	(ஆங்கிலம்) 100	ரூ.	2-0
பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத்தாள்கள்	(ஆங்கிலம்) 100	ரூ.	1-0

(தபால் செலவு உட்பட)

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல் முன்பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

றான். காட்டிக் கொடுக்கும் குடிலர்கள்—போரிட அஞ்சாப்பேதைகள்—மன்னனைச் சுரண்டி வாழும் உலுத்தர்கள்—ஒரு பெண் போர்ப்புலி ஆவதா, நம் புகழ்சாவதா என்றெண்ணிக் குமுறிய பொறாமைப் பேயர்கள முதலானோருடைய வலையிலே சிக்கி, அறிவை இழந்து, போரிட மறுத்து, போகவாழ்வை மேற்கொண்டான் புலியெனச்சீறிப் போர்க்களம் புகுந்து பகைவரை வீழ்த்த வேண்டிய சார்லஸ்! 'சிங்கம் அல்லன் அவன் சிறு முயல்!'' என்பதை அறிந்ததும் வீராங்கனை ஜோனின் உள்ளம் ஆயிரம் தூள்களாகச் சிதறுண்டு போகலாயிற்று. சுண்டெலி சார்லசை சிறுத்தை என்றெண்ணி ஏமாந்த தன் பேதமையை எண்ணி மிகவும் வருந்தினாள் இலட்சியவாதி ஜோன். நீ தானே ஜோன் வெற்றியைத் தேடிக் கொடுத்தாய் சார்லசுக்கு! — உனக்கில்லாத உரிமை அவனுக்கு ஏது— அவனை ஏன் கேட்கிறாய்—நீ ஒரு வார்த்தை கூறு போதும், போர் வீரர்கள் ஆயிரமாயிரவர் வருவர்— பாரிஸ் செல்வோம் என்று பலர் ஜோனிடம் வந்து கூறினர். ஆனால் ஜோன் அதை ஒப்பினாளில்லை. நாமே முடிசூட்டிய மன்னன் கட்டளையின்றி நாமே போர்தொடுத்தல் அறமன்று —அநீதி என்று கூறி அந்த 'தகா வழி' யை வெறுத்து ஒதுக்கினாள்.

போரிட வேண்டிய காலம் கடந்தபிறகு, போகலாம் போருக்கு என்று 'அனுமதி' கொடுத்தான் சார்லஸ். அப்போதும் வேண்டா வெறுப்புடன் மிகச் சில போர் வீரர்களையே ஜோனுடன் அனுப்பி வைத்தான். பாரிஸ் போன்ற பெரியதோர் நகரத்தை, தலை நகரத்தை, பகைவர்தம் பலமான பாதுகாப்பில் இருந்த நகரத்தைக் காப்பாற்ற அந்தப் படை சிறிதும் போதாது. எனவே, தோல்வி, ஜோனை அண்டியதிலே எவருக்கும் வியப்பு கொஞ்சமும் இருக்க முடியாது.

கைப்பிடி அளவுள்ள படை வீரர்களே அவளிடம் எஞ்சியிருந்தனர் என்றாலும், ஜோன், பிரான்ஸ் மீதிருந்த ஆசைகாரணமாக, தன்னுடைய படையின் கேலிக்கிடமான சிறு நிலையையும் மறந்து காம்பீன் என்னுமிடத்தில் சென்று போர் புரியத் தொடங்கினாள்—அவள் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ளவேண்டுமென்று ஆர்வத்துடன் எண்ணியிருந்த ஆங்கிலேயர் கைகளிற் சிக்கினாள்.

வெற்றிமேல் வெற்றி பெற்றுக் கொண்டிருந்த தங்களைப் புறமுதுகு காட்டித் தோற்றோடச் செய்த ஜோன் தங்கள் கைகளிற் சிக்கியதும் பெருங்களிப்புக் கொண்டனர் ஆங்கில வீரர்கள். அவளை உயிருடன் கொளுத்தி, சித்திரவதை செய்து, சித்தம் களிக்க விரும்

பினர். ஆனால், அவளை உடனே கொளுத்திவிட்டால், ஏற்கெனவே பிரஞ்சு நாட்டினரால், தங்களுக்கு வாழ்வளிக்க வந்த வீராங்கனை என்று பெரு மகிழ்ச்சியுடன் போற்றிப் புகழப்படும் அந்த இளம் பெண், பிறகு, தன் நாட்டின் வாழ்வு இன்பவாழ்வாக இருப்பதற்காகத் தன் வாழ்வையே அர்ப்பணித்த தியாகி என்றல்லவா போற்றப்படுவாள்? எனவே அந்த அறப்போர் ஆரணங்கின் மீது இல்லாததும் பொல்லாததும் கூறி, வீண்பழி பல சுமத்தி, விசாரணை நாடகம் ஒன்றை நடத்தி, அதன் முடிவான தீர்ப்பாக அவளை தீயிலிடப்பட வேண்டும் என்று ஏற்படுத்தி, அதன் பின்னர் அவளை நெருப்பிலிட்டு நெஞ்சு நைந்து சாக வைப்பதே சாலச் சிறந்தது என்று அவர்கள் எண்ணினர், எண்ணியபடியே செயல் புரிந்தனர்.

அவள் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்ட பிறகு, ஏறத்தாழ ஓராண்டு காலம் வெஞ்சிறையில் கிடத்திவாட்டி வதைக்கப்பட்டாள். ஆனால், அந்த ஓராண்டுக் காலத்தில் ஒரு நாள்கூட, அவளால் முடி சூட்டப்பட்டு மன்னனாக்கப்பட்டு நாடும் வாழ்வும் வாழ வீடும் தேடித் தரப்பட்ட முதல்காரமான துரோகி சார்லஸ், அவளைக் காப்பாற்ற, போரிட்டு மீட்க, பணம் கொடுத்துத் திருப்பிப் பெற, அல்லது வேறு வகைகளில் அவளுக்கு விடுதலை அளிக்க ஒரு சிறு முயற்சியும் செய்யத் துணிந்தானில்லை. எந்த வீரமங்கை தனக்குப் புது வாழ்வையும் பெருவெற்றியையும் அரும்பாடுபட்டுத் தேடித் தந்தாளோ, எந்த வீரமங்கையின் தீரச் செயல்களால் எலிகளெனத் தம்மை இகழ்ந்தவர் நடுங்கப் புலிகளெனச் செயல் செயப் புறப்பட்டனரோ தன் போர் வீரர்கள், எந்த வீரமங்கை தோன்றாமலிருந்தால் தனக்கு இழிவும் பழியும் அவமானச் சொல்லுமே வரலாற்றுச் சுவடியில் பொறிக்கப்பட்டிருக்குமோ, அதே வீரமங்கை அயலார் கரத்திலே சிக்கி வேதனையுற்று வாடி வதையும் காட்சியைக் கண்டும், பிரான்ஸ் வாய்மூடி மௌனியாகத்தான் இருந்துவிட்டது. வெட்கம்! வெட்கம்!! தன்னை வாழ்விக்க வந்த வீராங்கனைக்கு வாழ்வளிக்கத் தவறிவிட்டது.

ஓராண்டு கால விசாரணைக்குப் பிறகு, வீரமங்கை ஜோனுக்கு, ஆங்கிலேயர்களால் நிறுவப்பட்ட வழக்கு மன்றம், அவளை உயிருடன் தீயிலிட்டு கொளுத்தப்பட வேண்டும் என்ற கொடிய தண்டனையை விதித்தது. தண்டனை அவள் புரிந்த எந்தக் குற்றத்திற்காகவாம் தெரியுமோ? ஒரு பெண்ணாகப் பிறந்த அவள் ஆண் உடை தரித்து ஆடவர்போல் போரா

டிப் பெண்குலத்திற்கே பேரிழுக்குத் தேடிய குற்றத்திற்காகவாம்! இது ஒரு குற்றம் தானா அவள் புரிந்தது? இல்லை! இன்னமும் உண்டு! பெருமை பொருந்திய மாதா கோயில் இருக்கும்போது, அதை மறந்து விட்டு, ஆண்டவனை அதன் மூலமாய் வழிபடும் நேரிய முறையை மறந்து விட்டு, நேரிடையாகவே, மாதா கோயிலின் துணையின்றியே, ஆண்டவனிடம் அடிக்கடி முறையிட்டு அதன் அருளைப்பெற நினைத்தாளாம் ஜோன் — அது மற்றோர் 'குற்ற'மாம்! பெண்ணாக இருந்தும் அவள் போர்முனை புகுந்தது சாத்தானின் சேட்டையாம்! சாத்தான் தன்னிடம் தங்கி இருந்து, தன் தீய நினைப்புகளை நிறைவேற்றிக் கொள்ளும் கருவியாகத் தன்னைப் பயன்படுத்திக் கொள்வதை அறிந்திருந்தும் அதை அனுமதித்தது அவள் புரிந்த வேறோர் குற்றமாம்! இப்படிப்பட்ட குற்றங்கள் பன்னிரண்டைக் காரணமாகக் காட்டி அவளுக்கு மரண தண்டனை விதித்தனர் நீதிபதிகள் என்ற பெயர் தாங்கிய மதகுருக்கள். ஆனால், அவள் செய்த உண்மைக் குற்றம் — தான் பிறந்த பொன்னாட்டின் விடுதலைக்காகப் போராடிய பெருங் குற்றம் — அதை மட்டும் எடுத்துக் கூற மறந்து விட்டனர்!

ஓங்கி வளர்ந்த கழுமரம்! அதனுடன் சேர்த்துப் பிணைத்துக் கட்டித் தொங்க விடப்பட்ட வீரமங்கை ஜோன்! கீழே, அடுக்கடுக்காக சிறு குன்றுபோல் அடுக்கிவைக்கப் பட்டுள்ள விறகுக் கட்டைகளின் வரிசை! ஈவு இரக்கமற்ற பெருங் கூட்டம்! இது தான், ஜோன், வயது பத்தொன்பதும் முடியாத வீர இளம்பெண், சொந்த நாட்டின் விடுதலைக்காகச் சுகவாழ்வை மறந்து உற்றார் உறவினரைத் துறந்து அஞ்சா நெஞ்சுடன் போராடி அரிய செயல் ஆற்றிய ஆரணங்கு, உலக வரலாற்றிலே தனக்கென்று ஒப்பற்றதோர் இடத்தைத் தேடிக் கொண்ட மாதர்குல மாணிக்கம், தன்னுடைய அந்த அழகிய—தூய—இனியநற் கண்களால் கண்ட கடைசிக் காட்சி!

தீ மூட்டப் போகிறார்கள் தன் உடலுக்கு—வெந்து சாம்பலாகப் போகிறது தன் திருமேனி—நெருப்புப் பிழம்புகள் கண நேரத்தில் தன்னை வாட்டி வதைக்கப் போகின்றன என்பதை ஜோன் நன்றாக அறிந்திருந்தும் அவளுடைய முகத்திலே சோகத்தின் சாயலும் காணப்படவில்லை! மரணம் அவளை நெருங்கி வந்த அந்த நேரத்திலும் வீரமும், தீரமுமே அங்கே துள்ளி விளையாடின. நீல நிற வானத்தில் நிர்மலமான தோற்றத்துடன்

முழு நிலா நின்றும் காட்சியைப் போலவே இருந்தது அந்த அழகு மங்கையின் களங்கமற்ற முகம் ஓங்கி உயர்ந்து காணப்பட்ட காட்சி.

பிறகுக் கட்டைகளுக்குத் தீ வைக்கப்பட்டது. தீ விரைவில் ஜோனின் அழகு மேனியை அண்டிற்று. புன்முறுவல் பூத்த முகத்துடனே, பாய்ந்தோடி வந்த நெருப்பு ஜ்வாலைகளை அணைத்துக் கொண்டாள் பால் போலும் தூய்மை படைத்த அப் பாவை!

*   *   *

ஜோன் மறைந்த 25 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் ஒரு விசாரணை நடத்தப்பட்டு ஜோன் குற்றமற்றவள் என்று வெளிப்படையாக அறிவிக்கப்பட்டது.

*   *   *

பிரஞ்சுக் கவிவாணர் லாமார்டைன் எழில்பட இயம்புவது போல, "ஜோன், பிரஞ்சு நாட்டின் தீர்க்கதரிசி—வீராங்கனை—தேசியத் துறவி! பிரஞ்சு நாட்டிற்கு விடுதலையை புது வாழ்வைப் பெரும் புகழை அதே சமயத்தில் அவளைக் காப்பாற்றத் தவறிய அவமானத்தை அளித்துச்சென்ற அறப் போர்த் தலைவி! பிரஞ்சு நாட்டின் போர் வீரர்களின் அழகிய கொடியிலே அஞ்சாமைப் பண்பாட்டின் சின்னமாக இருக்க மிகவும் ஏற்றவள்." ஆம்! அது மட்டுமல்ல! அவள் தோகையர் குலத்தின் திருவிளக்கு! பெண் உலகத்தின் சிறந்த வழி காட்டி! அவள் புகழ் பிரஞ்சு நாட்டின் தனி உடைமை அன்று—உலகெங்குமுள்ள மெல்லியலாரின் பொது உடைமை!

அறிவுக் கதிர்

இந்தியாவின் தேசிய இயக்கம் பழமைகள் அனைத்தையும் அளவு கடந்து புகழவும், புதுமையைக் குறை கூறவுமே கற்றுக் கொடுத்து விட்டது.

— டாக்டர் பராஞ்சிபே

மக்களின் சர்க்கார் என்ற கொள்கை சரிதான். ஆனால், "மக்களால் நடத்தப்படும் சர்க்கார்" என்பது சரியல்ல. அரசாட்சியை நடத்தத் தகுதி பெற்றவர்கள் என்று புடம் போட்டுப் பொறுக்கியெடுத்த நபர்களை மக்கள் தேர்ந்தெடுத்து, அந்த நபர்களைக் கொண்ட மந்திரி சபைகள் மூலமே ஆட்சியை நடத்த வேண்டும்.

— பெர்னார்ட்ஷா.

"ஆரம்பக் கல்வி" இனும்

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையில், எமது "புது முறை சங்க வாசகங்களை" பாட புத்தகங்களாக வைத்து ஆதரிக்கும் எய்டெட் ஆரம்பப் பாடசாலைகளுக்கு, "ஆரம்பக்கல்வி", மாதப் பத்திரிகையை இனுமாக மாதாமாதம் அனுப்பிவைக்கப் படும். மாதிரிப் பிரதிகள் வேண்டுபவர்கள் கீழ்க் குறித்துள்ள அளவுக்கு தபால் ஸ்டாம்புகளை (Postage Stamps) வாங்கி கவரில் வைத்து அனுப்பவும். புத்தகங்கள் இனுமாக (Book Post)ல் அனுப்பப்படும்.

ஸ்டாம்புகள் அனுப்ப வேண்டிய தொகை

புதுமுறை சங்க வாசகங்கள்

	புத்தகத்தின் விலை			கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
முதல் வகுப்பு	0	4	0	30	23–5–'50
இரண்டாம் வகுப்பு	0	5	0	25	23-5-'50
மூன்றும் வகுப்பு	0	7	0	26	23-5-'50
நான்காம் வகுப்பு	0	8	0	28	23-5-'50
ஐந்தாம் வகுப்பு	0	9	0	28	23-5-'50

இந்த ஐந்து புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் 0-3-3 தபால் பில்லைகள் அனுப்பவும்.

கதைப் புத்தகங்கள்

பாலர் நல்ல கதைகள் நான்காம் வகுப்பு	0	5	0	33	23-5-'50
பாலர் கதா போதினி ஐந்தாம் வகுப்பு	0	5	0	33	23-5-'50

இந்த இரண்டு புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் 0–1–9 தபால் பில்லைகள் வாங்கி அனுப்பவும்.

இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

மூன்றும் வகுப்பு	0	5	0		
நான்காம்	0	7	0	21	23-5-'50
ஐந்தாம்	0	8	0	21	22-5'50

இந்த மூன்று புத்தகங்கள் வேண்டுவோர் 0–1–9 ஸ்டாம்புகள் அனுப்பவும்.

புதிய தேச ஆட்சி முறை

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
மூன்றும் வகுப்பு	0 5 0		
நான்காம் வகுப்பு	0 7 0	11	23-5-'50
ஐந்தாம் வகுப்பு	0 8 0	13	23-5-'50

இந்த மூன்று புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் 0–1–9 ஸ்டாம்புகள் அனுப்பவும்.

Mother India English Reader First Primer 0 4 0

மேற்குறித்த 1 முதல் 5-வது வகுப்பு வரையில் எம்மிடத்தி லுள்ள எல்லாப் பாடப் புத்தகங்களையும் மாதிரிப் பிரதிகளாக வேண்டுபவர்கள் 0–8-0 தபால் பில்லைகள் அனுப்பி வைக்கவும்.

உயர்தர ஆரம்பப் பாடசாலைகளுக்கு

(Higher Elementary Schools)

அனுமான முறை இலக்கணமும் உரை நடை ஆக்கமும்

ஆறும் வகுப்பு	0 12 0	29	23-5-'50
ஏழாம் வகுப்பு	0 12 0	29	23-5-'50
எட்டாம் வகுப்பு	0 12 0	29	23-5-'50
தென்னிந்திய பெருமக்கள் 6, 7, 8 வகுப்புக்களுக்கு	0 10 0		

இந்த நான்கு புத்தகங்களை மட்டும் மாதிரிப் பிரதிகளாக வேண்டுபவர்கள் 0–2–9 தபால் பில்லைகள் அனுப்பவும்.

ஆட்சி முறையும் உடல்நல முறையும்

Civics and Hygiene

ஆறும் வகுப்பு	0 9 0	16	23-5-'50
ஏழாம் வகுப்பு	0 12 0		

0–1–9 தபால் பில்லைகள் அனுப்பவும்.

புத்தகம் வைத்துள்ள தோழர்களுக்கு

சென்ற வருடம் நமது பாட புத்தகங்களை வைத்து ஆதரித்து இனமாக நமது "ஆரம்பக் கல்வியை" பெற்றுக் கொண்டு வரும் பாடசாலைத் தலைமை ஆசிரியர்களும், நிர்வாகி களும், மே 31-ம் தேதிக்குள், தாங்கள் இவ்வருடமும் 1950—1951 தொடர்ந்து வாசகங்களை வைத்துக் கொள்வதாக ஒரு கார்டு நமது காரியாலயத்திற்கு முன்னதாகவே எழுதிவிடும் படி கேட்டுக்கொள்ளுகிறோம். அதன்பிறகுதான் ஆரம்பக் கல்விதொடர்ச்சியாக வரும்.

கொரியா

ஆசியாவின் கிழக்குக் கரையில் ஜப்பானை நோக்கி நீண்டிருக்கும் தீபகற்பம் கொரியா. 500 மைல் நீளமும் 85,000 சதுரமைல் பரப்பும் 3 கோடி ஜனத்தொகையும் உள்ள நாடு இது. அங்குள்ள ஜனங்கள் மங்கோலியா இனத்தைச் சார்ந்தவர்கள். தார்த்தார், மங்கோல், ஜப்பான் என்ற மூன்று பாஷைகளின் கலப்பான ஒரு மொழியும் சீனலிபியும் இங்கே வழங்குகின்றன. கன்பூஷிய மதம், பௌத்த மதம், கிறிஸ்துவ மதம் என்னும் மதங்களைப் பின்பற்றுகிறவர்கள் இங்கே வாழ்கின்றனர். நிலவளமும் கனிப் பொருள் வளமும் இங்கே நிரம்பியுள்ளன. அரிசி, கோதுமை, பார்லி, மொச்சை, பருத்தி, புகையிலை என்பவை மிகுதியாக விளைகின்றன. தங்கம், தாமிரம், இரும்பு, நிலக்கரி ஆகியவையும் நிரம்பக் கிடைக்கின்றன. கால்நடைப் பண்ணைகள் பல உண்டு. வெளிநாடுகளுக்குத் தோல் ஏற்றுமதியாகிறது. மீன் பண்ணை அதிகம்.

3000 ஆண்டுகளுக்கு முன் சீனர் குடியேறிச் சிறிய சிறிய அரசுகளை நிறுவினார்கள். பிறகு எல்லாம் சேர்ந்து ஒரே ராஜ்யம் ஆயின. 19-ஆம் நூற்றாண்டின் இறுதிவரையில் சீனாவுக்குக் கப்பம் கட்டியது. 1904-ஆம் வருஷம் முதல் ஜப்பான் பாதுகாப்பு. 1910 முதல் ஜப்பானோடு இணைந்தது. ஜப்பான் ஆட்சியில் ஒழுங்கும் தொழில் வளமும் அமைந்தன. ஆனால் சுதந்தர உணர்ச்சியை ஜப்பானியர் நசுக்கினார்கள். சுதந்தர உணர்ச்சியுள்ளவர்களை நாடு கடத்தினார்கள். கொரியா மக்கள் எல்லா வகையிலும் ஜப்பானியராகவே ஆகிவிட வேண்டுமென்று ஜப்பானியர் எண்ணினர். நாடுகடத்தப்பட்டவர்களும் பிற நாடுகளில் வாழ்ந்த கொரியர்களும் சேர்ந்து 1919-இல் ஷாங்காயில் ஓர் தேசிய அரசாங்கம் நிறுவினர். அதன் தலைவர் ஸிங்மன் ரீ.

இரண்டாம் உலகப் பெரும் போரில் ஜப்பான் தோற்றது. யால்டாவில் நடந்த ஒரு மகாநாட்டில் 1945 டிசம்பரில் அமெரிக்கா, ருஷ்யா, பிரிட்டன், சீனா என்னும் நான்கு நாடுகளின் மேற்பார்வையில் பாதுகாப்பு நாடாக 5 வருஷம் வைத்திருப்பதென்றும், பிறகு சுதந்தரம் அளிப்பதென்றும் தீர்மானமாயிற்று. இந்த ஐந்து வருஷ காலத்தில் நிர்வாகத்தை நடத்த ஒரு தேசிய அரசாங்கம் நியமிக்க முயற்சி நடந்தது. ருஷ்யாவுக்கும், அமெரிகாவுக்கும் ஏற்பட்ட சச்சரவினால் இது நிறைவேற இல்லை.

38-ஆவது அட்சரேகைக்கு வடக்கே உள்ள கொரியாவில்

ருஷ்யா ஆதிக்கம் செலுத்தியது. தென் கொரியா அமெரிக்கர் பார்வையில் இருந்தது. அங்கங்கே தனித்தனி அரசாங்கங்கள் ஏற்படுத்தப் பெற்றன. வட கொரியாவில் கம்யூனிஸ முறையில் நிர்வாகம் நடைபெற்றது. தென் கொரியாவில் சட்டசபை ஒன்று ஏற்பட்டது. நியமன அங்கத்தினர் 45 பேரும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் 45 பேரும் அடங்கியது அது. தலைவர் ஸிங்மன் ரீ. தலைநகர் ஸியோல்.

வட கொரியாத் தலைவர் கிம் இல் ஸ—ுன். தலைநகர் ப்யோங் யாங்.

வட கொரியாவில் ருஷ்யப் படைகளும், தென் கொரியாவில் அமெரிக்கப் படைகளும் இருந்தன. நல்ல ராணுவப் பயிற்சி அளித்துவிட்டு ருஷ்யப் படைகள் 1948-ஆம் வருஷம் கொரியாவை விட்டு சென்றன. அமெரிக்கர் 1949 டிசம்பரில் தங்கள் சேனையைத் தென் கொரியாவிலிருந்து மீட்டுக்கொண்டார்கள். ஆனால், கொரியர்களுக்கு உதவியாக 500 ராணுவ அதிகாரிகளை மாத்திரம் விட்டு வைத்தார்கள்.

வட கொரியாவில் உள்ளவர்களுக்கு ருஷ்யர்கள் நல்ல ராணுவப் பயிற்சி அளித்திருக்கிறார்கள். ஒருவரிடத்தில ஏராளமான நிலங்கள் இருப்பதை மாற்றி ஒவ்வொருவருக்கு இரண்டரை ஹெக்டார் வீதம் பிரித்துக் கொடுத்தார்கள். கம்யூனிஸக் கொள்கைகளை நன்றாகப் பிரசாரம் செய்திருக்கிறார்கள். தென் கொரியா, கொரியாவில் மூன்றில் இரண்டு பங்கு அளவுள்ளது. அங்கேதான் ஜனத்தொகை அதிகம். பயிரிடும் நிலங்களும் அதிகம். ஆனால் தென் கொரியர்களிடத்தில் சுறுசுறுப்பு இல்லை; ஒற்றுமை இல்லை. தென் கொரியாவில் கூட, வடகொரியாவிலிருந்து வந்த கம்யூனிஸ்டுகள் இருக்கிறார்கள். அவர்கள் மக்கள் உள்ளத்தில் ருஷ்யக் காதலை உண்டாக்கி வருகிறார்கள்.

25-6-1950 அன்று வட—தென்கொரியாவுப் போர் மூண்டது. வட கொரியா அநியாயமாக ஆக்கிரமித்ததாக ஐ. நா. சபை தீர்மானித்திருக்கிறது. அமெரிக்கப் படைத்தலைவர் ஜெனரல் மக் ஆர்தர் தென் கொரியாப் படைத்தலைவராக இருக்கிறார். ஐ. நா. சபையின் சார்பில் அவர் போரை நடத்தி வருகிறார். ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கும் நாடுகள் தங்கள் படைகளையும் அனுப்பியிருக்கின்றன. இது வரையில் வட கொரியர்களுக்கே வெற்றி ஏற்பட்டிருக்கிறது.

அறிவீர்களா?

(மி. சு. திருநாவுக்கரசன்—பெரியகுளம்)

1. அறிவுத்துறையில் முதன்மை ஸ்தானமும்; அகில வாழ்வில் கடைசி ஸ்தானமும் வகிப்பவர்கள் ஆசிரியர்கள் என்பதை மக்கள் அறிவார்களா?

2. உலகம் குழந்தைகளுடைய தென்பதையும், குழந்தைகளுக்காக, குழந்தைகளுடன் உயிர் வாழும் ஆ சி ரி ய ர் க ளி ன் வாழ்க்கையை உலகம் உணரவில்லை என்பதையும் மக்கள் அறிவார்களா?

3. கல்வித் தொண்டே தம் தொண்டென மூச்சுவிட்டு வாழும் ஆசிரியர்கள், கழுமரத்திலேற்றப்பட்ட வா ழ் க் கை யை நடத்துகிறார்கள் என்பதை மக்கள் அறிவார்களா?

4. தனிமை என்பது நல்லவர்களுக்கு இல்லை என்பதையொப்ப ஆசிரியர்கள், வறுமையால் பல முறைகளிலும் சூழப்பட்டு தனிமையை இழந்து நிற்பதை மக்கள் அறிவார்களா?

5. உண்மையாக உழைப்பவர்கள் சொற்பம், ஆகவே அத்தகையினராக ஆசிரியர்கள் விளங்குவதால், அவர்களுக்கு ஊதியமும் சொற்பம் என்பதை மக்கள் அறிவார்களா?

6. உலகம் நலம் பெற மூளைக்குப் பலம் அளிக்கவேண்டும்; அப்பெருமை ஆசிரியர்களுடையதாக இருப்பதால், அவர்கள் தங்கள் வாழ்வில் பலமற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதை மக்கள் அறிவார்களா?

7. நல்ல நாட்டிற்குக் 'கருந்தனம்' 'அறிவு வளர்ச்சி' என்பதும், ஆசிரியர்களுக்குக் 'கருந்தனம்' "வறுமை, பிணி, அற்பாயுள்" என்பன வென்பதை மக்கள் அறிவார்களா?

8. எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான இடம் நோக்கிச் செல்லும் இந்த வையம்—ஆசிரியர்களுக்கு மட்டிலும் வாழ ஏங்கும் வகையை வகுக்கின்றது என்பதை மக்கள் அறிவார்களா?

9. ஆளுந்திறனும் அன்புமில்லாத ஆட்சியைப் போல், ஆசிரிகளின் கூட்டம் நாளும் உலகில் வாடி வதங்குவதை மக்கள் அறிவார்களா?

10. கலை இழந்த சந்திரனும், கலா ஆசிரியனை இகழும் நாடும் ஒன்றென்பதை மக்கள் அறிவார்களா?

11. அறிவின் பலமின்றி ராணுவத்தின் பலத்தால் ஆணவம் பெற்று, அகிலத்தை ஆள இயலாதென்பதையும், ஆசிரியர்கள் நல்வாழ்வு வாழவகை கண்டாலன்றி அகிலம் வாழாது என்பதை மக்கள் அறிவார்களா?

12. கல்வி வாழ்க்கையின் அஸ்தி வாரம் மட்டுமென்று கோபுரமாகும், அது போன்று ஆசிரியர்கள் கலையின் கண்கள், அக்கண்கள் கெட்டால், நாட்டில். வாழ்வில் இன்பமில்லை. என்பதையும் மக்கள் அறிவார்களா?

13. ஆதித்தனில்லாவிடில் சந்திரனுக்கு ஒளி இல்லை; ஆசிரியர்கள் இல்லாவிடில், அவர்களுக்கு அற்ப ஆயுள், ஆனல் உலகிற்கே வாழ்வில்லை என்பதை மக்கள் அறிவார்களா?

14. அடக்க முடையவர் ஆசிரியர்; அருஞ்செயல் செய்ய இயலாதவர் ஆரவார முடையவர் என்பதை மக்கள் அறிவார்களா?

15. சுழற்சியினிடையே அசையாத டம்பரத்தின் நிலையும், நம் நாட்டின் ஆசிரியர்களின் நிலையும் ஒன்றென்பதை மக்கள் அறிவார்களா?

16. உலகில் மலர்ந்த பூ மீண்டும் மொட்டாவதில்லை, ஆனல் ஆசிரியர் எனும் மலர்ந்த மலர், தம் வாழ்வில் மொட்டாகிக் கருகுகிறது என்பதை மக்கள் அறிவார்களா?

17. "கறையான் புற்று வைக்க பரம்பு குடியிருக்க" என்பது பழமொழி—அதுபோல்," ஆசிரியன் போதித்த அறிவைப் பெற்ற குழாம்; ஆட்சி பீடத்திலமர்ந்து ஆசிரியர்களை அவமதிக்க" எனும் புது மொழியை மக்கள் அறிவார்களா?

18. ஆசிரியர்களுக்கு ஈயத்திறனில்லாது போயினும் இன்சொலேனும் சொல்லா தொழியின்—அதுபெருந்தீதாய்முடியும் என்பதை மக்கள் அறிவார்களா?

19. குறைகளைப் போக்கி, ஊக்கம் அளித்து, உறுதி பயக்கும் நிறைகளைச் செய்வதும் மக்கள் ஆட்சி ஏக்கத்திலும், தூக்கத்திலும் ஆசிரியர்கள் ஆழ்ந்து இருப்பதற்கிலக்காக மிளிர்வதும் மககள் ஆட்சி என்பதை மக்கள் அறிவார்களா?

20. "கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான்குடிக்கத்தான் கற்பித்தானே?" என்று ஓர்புலவர் அன்றுபாடிய பாடலை, இன்னும் ஆசிரியர்களின் கூட்டம் பாடிக் கொண்டிருக்கிறதென்பதையும், அகிலமெலாம் இவ்வொலியின் ஓசை இலங்குவதையும் மக்கள் அறிவார்களா?

கட்டாய இந்தி விருப்பப் பாடமாக்கப் பட்டது.

உயர்நிலைபள்ளிகளில் மொழிகளைப் போதிப்பது பற்றிச் சர்க்காரின் முடிவை, கல்வி மந்திரி தோழர் மாதவமேனன் இன்று தலைமை ஆசிரியர்கள் கூட்டத்தில் அறிவித்தார். சமீபத்தில் வெளியிடப்பட்ட கருத்துக்களை கவனித்து, புதுத் திட்டத்தைச் சர்க்கார் தயாரித்திருக்கிறார்கள்.

புது ஏற்பாட்டின்படி மொழி போதனைத் திட்டம், ஏ. பி. சி என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டது.

(ஏ) என்ற பிரிவில், வட்டார மொழியும், ஆங்கிலமும் இருக்கின்றன. இவற்றை எல்லா மாணவர்களும் கட்டாயமாகக் கற்க வேண்டும்.

(பி) என்ற பிரிவில், இந்தி இருக்கிறது. இந்தியைப் படிக்க விரும்பாதவர்களுக்கு, அதிகப்படியாக கைத்தொழில் பயிற்சி தரப்படும். அல்லது வேறு அலுவல்கள் எடுத்துக் கொள்ளலாம்.

(சி) என்ற பிரிவின் கீழ், விருப்பப்படி படிப்பதற்கு மொழிகளில் சேர்க்கப்பட்டுள்ளன. ஸமஸ்கிருதம் போன்ற மொழியையோ அல்லது வேறு இந்திய மொழியையோ அல்லது வட்டார மொழியையோ (அதாவது தமிழ் நாட்டில் தமிழில்) அதிகப்படியான பாடங்களை மாணவன் எடுத்துக் கொண்டு படிக்கலாம்.

புதுத்திட்டமானது இவ்வாண்டே முதல் பாரத்தில், அமுலுக்குக்கொண்டு வரப்படுகிறது. அடுத்த ஆண்டு முதல் படிப்படியாக மேல் வகுப்புகளுக்கு விஸ்தரிக்கப்படும்.

யோசனைகளை கேட்டே முடிவு செய்வோம்.

ஸ்ரீ மாதவ மேனன், சிந்தாதரிப் பேட்டை ஹைஸ்கூலில் (18-7-50) ஹெட்மாஸ்டர்கள் சங்கக் கூட்டத்தில் பேசியதாவது:—

"உபாத்தியாயர்களுடன் அடிக்கடி தொடர்பு கொள்வது என் கடமைகளில் ஒன்று என்பது என் எண்ணம். நான் கல்வி மந்திரி, ஆனால் கல்வித் துறையில் நிபுணன் அல்ல. அதற்காக நான் வருந்தவில்லை. ஜனநாயகமானது பாரம்பரிய வமிசாவளி ஆட்சி உரிமையை எப்படி எதிர்க்கிறதோ அப்படியேதான் நிபுணர்கள் தான் ஆட்சி புரிய வேண்டும் என்பதையும் எதிர்க்கிறது.

ஆனால் தேர்ந்தெடுக்கப் பட்ட ஊழியர்கள், தங்களுக்கு வழி காட்ட, கீழ் கண்ட 3 விஷயங்களில் நாட்டம் காட்டாவிட்டால், ஜனநாயகம் ஒரு அற்பமான பொருளாகி விடும். முதலாவது பொதுஜன அபிப்பிராயத்தைக் கேட்க வேண்டும். அடுத்தபடி நிபுணர்கள் கருத்தை கேட்க வேண்டும். தேசபக்தியில் மற்ற யாருக்கும் குறைந்தவர்களாக இல்லாத நிரந்தர அதிகாரிகளின் கருத்தைக் கேட்க வேண்டும்.

ஆனால், இறுதியில் முடிவு செய்யும் பொறுப்பு மந்திரிகளுடையது.

ஆனாலும் ஆலோசனைகளை அவர்கள் புறக்கணிக்கக் கூடாது;

சொல்லப்படும் ஆலோசனைகள் ஒன்றுக் கொன்று முரண்பட்டவைகளாகவும் இருக்கும். எதை ஏற்பது என்பதை முடிவு செய்வது மந்திரிகள் பொறுப்பு. எல்லா யோசனைகளையும் ஏற்பதென்பது சாத்தியமல்ல. ஒவ்வொருவரையும் திருப்திபடுத்தமுயன்றால், கழுதையை ஓட்டிச் சென்ற தகப்பனார், மகன், கதையாகத்தான் முடியும்.

பாஷைப் பிரச்னை

கல்வி பிரச்சினையை குறிப்பிட்டு மந்திரி கூறியதாவது:— மனித நாகரீகத்தில் ஒரு சகாப்தத்தின் இறுதியிலே நாம் இருக்கிறோம். பிரச்சினைகள் தவிர்க்க முடியாதவை. நமது நாட்டுப் பிரச்சினைகள், மற்ற நாடுகளில் உள்ளதைவிட சிக்லானவை. மற்ற எல்லாவற்றையும் விட கல்வி பிரச்சினையை விருப்பு வெறுப்பு, துவேஷம் முதலியன இன்றி சாவதானமாக யோசித்து முடிவு செய்ய வேண்டும். நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் கருத்தில் கொண்டு முடிவுகள் செய்ய வேண்டும்.

பாஷைப் பிரச்சினையைப் பற்றி நீங்கள் நன்றாக ஆலோசித்திருப்பீர்கள். ஆனால், இவ்விஷயமாக அபிப்பிராயம் சொல்லும் எல்லோரும், இப்படி ஆலோசனை செய்தவர்கள் என்று சொல்ல முடியாது. கல்வி, நமது குழந்தைகளின், நன்மைக்காக ஏற்பட்டது. கல்வி வசதியால் குழந்தை சாதாரண மனித சமூக பழக்கத்திலிருந்து பெறுவதைவிட உயர்தரமான பாஷா ஞானம் பெறுகிறது. முன்பு அறிஞர்கள் பலர் எழுதிவைத்து விட்டுப் போன பொக்கிஷங்கள் போன்ற அரிய நூல்களை வாசிப்பதற்கு இந்த பாஷை வசதி செய்வதினாலேயே, சாதாரணமாக பேசிப் பழக்கத்தில் உள்ள பாஷையை விட இது சிலாக்கியமானது என்று கருதுகிறோம்.

ஆகவே பாஷை போதனை முடிவான ஒரு விஷயமல்ல. அறிவை விஷய ஞானத்தைப்

பெறுவதற்கு அது ஒரு சாதனமே. கல்வி அறிவிலிருந்து புத்தி விலாசம் பெறுவதென்பது கல்வியின் மற்றொரு அம்சம். பாஷை தெரிந்தால தான் கல்வி கற்று புத்தி விலாசம் பெற ஹேது உண்டு.

பாஷை என்பது முடிவான ஒன்றல்ல. அது ஒரு சாதனமே. பாஷையே முடிவனதாகஇருக்குமானால் எந்தமொழி அல்லது எத்தனை மொழி நம் குழந்தைகளுக்கு கற்றுத்தரப்பட வேண்டும் என்ற கேள்வி எழுகிறது.

முதன் முதலாக, ஒரு பையன், தன் தாய்மொழியை நன்றாக அறிந்திருக்க வேண்டும்; இதில் தகராறே இல்லை. ஒரு குழந்தைக்கு தாய்மொழி சிறந்த போதனை மொழி.

ஒவ்வொரு குழந்தையும் ஆங்கிலம் கற்க வேண்டும். சென்ற கால நிலவர விளைவுகளை யொட்டியும், தற்போதையதேவையக் கருதியும் இது அவசிய மாகிறது. ஆங்கிலம் வைக்கப்படுவதை யாரும் ஆட்சேபிக்க வில்லையாதலால், அதைப் பற்றி நான் விஸ்தாரமாகப் பேச வேண்டியதில்லை.

பள்ளிக்கூட வாசிப்பு முடியும்போது இந்த இரண்டு மொழிகளிலும் மாணவர்கள் வார்த்தைகளை சரியானபடி உபயோகிக்க தெரிந்திருக்க வேண்டும். மொழியை கட்டாய பாடமாக்கு வதின் நோக்கம் இது தான். மொழியைக் கற்றுக் கொள்ளுவதால் வேறு நன்மைகளும் உண்டு.

இலக்கியங்களைக் கற்று இன்பமடைகிறார்கள். சிலர் கவிதைகள் எழுதி மற்றவர்களுக்கு இன்பம் அளிக்கிறார்கள்.

மற்றும் சிலர் சமஸ்கிருதம் போன்ற புராதன மொழியையோ, அல்லது தென் இந்திய மொழிகள் எதாவது ஒன்றையோ கற்க விரும்புவார்கள், அவர்களுக்கும் வசதி செய்யப்பட வேண்டும்.

ஆகவே மாணவர்கள் தங்கள் விருப்பத்துக்கும் திறமைக்கும் ஏற்ப பாஷைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும் தாய் பாஷையையே இன்னும் நன்றாகக்கற்றுக்கொள்ள விரும்பினால் தாய்பாஷையில் 2-ம்பகுதியை கற்கலாம்; அல்லது சமஸ்கிருதமோ, இதர தென் இந்திய பாஷைகளையோ வேண்டுமானாலும் கற்கலாம்.

பல மாணவர்கள் ஹிந்தி போதிக்கப் படவேண்டும் என்கிறார்கள். ஆகவே அந்த பாஷை கற்றுக் கொள்ளவும் வசதி செய்யப்பட வேண்டும். தற்போது எல்லா பள்ளிகளிலும் ஹிந்தி கற்றுக்கொள்ள வசதிகள் இருக்கின்றன. ஆனால் மாணவர்கள் ஹிந்தி அல்லது புராதன பாஷை யொன்றை கற்கவேண்டும் என்றிருக்கிறது. ஆகவே ஒன்றைக் கற்றால்

மற்றொன்றைக் கற்கமுடியாது. ஹிந்தி கற்க விரும்புகிறவர்கள் கற்கலாம், விரும்பாதவர்கள் அந்த நேரத்தில் ஏதாவது கைத்தொழில் செய்யலாம்.

இந்த புது கொள்கை மூலம் ஒரு மாணவன் இரண்டே மொழிகள் அதாவது தாய் மொழி, ஆங்கிலம் மட்டுமே கற்படுேதாடு வேண்டுமானாலும் நின்று விடலாம். ஒரே சமயத்தில் பல மொழிகளைக் கற்றுக்கொடுப்பது தவறு என்பவர்களுக்கு இந்த ஏற்பாடு திருப்தியளிக்கும்.

பலமொழிகள் கற்றுக்கொள்ளத் திறமை இருக்கிறவர்களுக்கும் இதில அதற்கான வசதி செய்யப்பட்டிருக்கிறது. தாய் பாஷை படிப்பது தடைப்படாமல் சமஸ்கிருதம் போன்றவைகளை அவர்கள் படிக்கலாம். ஹிந்தி படிக்க விரும்புகிறவர்களுக்கும் தனி வசதி செய்யப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ குருவில்லா ஜேகப் இந்த திட்டத்தை வரவேற்றுப் பேசியதாவது:—தங்கள் அறிக்கையை வாத்திமை தொழிலில் உள்ளவர்களும் கல்வித் துறையில் சம்பந்தப்பட்ட மற்றவர்களும் உவந்து வரவேற்பார்கள். இந்த திட்டத்திலே நீங்கள் எல்லோருக்கும் அனுதாபத்தோடு ஒரு நல்ல முடிவுக்கு வந்திருக்கிறீர்கள். இந்த திட்டம் எல்லோருக்கும் திருப்தி யளிப்பதாக இருக்கிறது.

மற்றும் ஒரே ஒரு விஷயத்தையும் நாங்கள் கேட்டுக் கொள்ளுகிறோம். இந்தக் கல்வி திட்டங்கள் ஸ்திரமாக நிற்குமாறு பார்த்துக்கொள்ளுங்கள். ஏதாவது மாற்றங்கள் அவசியமாக இருக்கும்போது கல்வி முறையை குழப்பிவிடக் கூடாது. சென்ற 8 வருஷங்களில் குழப்பங்கள் பல நேர்ந்தன.

கல்வி முறையில் மாறுதல்களைப் பற்றி, உபாத்தியாயர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பிரசுரகர்த்தர்கள் எல்லோருமே குழப்பமடைந்து போனார்கள். சில மாற்றங்கள், அரசியல் கட்சி வேற்றுமைகளால் விளைந்தவை என்றும் சொல்ல வேண்டியதாக இருககிறது.

பிரிட்டன் போன்ற நாடுகளில் எவ்வளவோ ஆலோசனைக்குப் பிறகுதான் கல்வி முறையை மாற்றுகிறார்கள் வெறும சர்க்கார் உத்தரவு ஒன்றால் மாற்றிவிடுவதில்லை. பல முறைகளில் பின்னடைந்துள்ள நமது கலவிமுறைகளில் நிலையான தன்மை அவசியம்.

ஆயிரக் கணக்கான குழந்தைகளைப் பாதிக்கும் விஷயமான கல்விப் பிரச்னை, அரசியல் கட்சி வேறுபாடுகள் களிகடம் புரியும் ஒரு துறையாகி விடக் கூடாது என்று மந்திரியைக்கேட்டுக்கொள்ளுகிறேன்.

Edited, Printed and Published by P. Veeraraghavan, in Venkatesan Press, 94/95 New St. Mannad G. T. Madras.